# நான்கு கவிமணிகள்

வி.ஆர்.எம்

ஸ்டார் பிரசுரம்

பதிப்புரிமை

முதற் பதிப்பு: டிஸம்பர், 1946.

*Copyright By*
Star Publications, Publishers,
Palakkarai :: Trichinopoly.

மதராஸ் ரிப்பன் பிரஸ், ராமச்சந்திரபுரம்
For Star Publications; P. I. Card Ty-9 A (Q. H.) (1000 Copies)

# நான்கு கவிமணிகள்

(Four Supreme Poets)

வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ.,

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1

ஸ்டார் பிரசுரம்
பாலக்கரை :: திருச்சி

விலை ரூ. 1/4

# பதிப்புரை

"நான்கு கவிமணிகள்" என்னும் இவ்வரிய நூலில், ஆசிரியர் திரு. வி. ஆர். எம். செட்டியார், நமது வங்கக்கவி தாகூர், கம்பர், ஆங்கிலக் கவி கீட்ஸ், ஷெல்லி இந்நால்வரின் வரலாறு, கவிதைச் சிறப்பு, கலையோவியம், இயலழகு முதலியவற்றைப் பற்றி, தக்க ஆராய்ச்சியுடன் இனிமையாய் எழுதி யிருக்கிறார். இதன் ஆசிரியர்; கலை, கவிதை, கவி யாராய்ச்சி இவற்றிலேயே பல ஆண்டுகள் தோய்ந்து தோய்ந்து நீந்தித் திளைத்தவர்; ஆங்கிலம், தமிழ் இவ்விரு மொழிகளிலும் பல அரிய நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிறார்.

இந் நூல், கவி தாகூருடன் ஆசிரியர் நேரில் பழகிய பல ரஸமான குறிப்புக்களையும், கம்பர் கவியின் கடவுள் தன்மையையும், அதன் சிறப்பையும், கீட்ஸ், ஷெல்லி இவ்விரு கவிக் கற்பகங்களின் இன்பத் தேன் பிலிற்றும் பாக்களின் அழகமுதத்தையும் அனைவரும் படித்துப் பயன் பெறும் வண்ணம் தெளிவாக விளக்குகிறது.

திருச்சி
1-12-1946.

ஸ்டார் பிரசுரத்தார்.

ஸ்டார் பிரசுரம், எண்: 31.

# பொருளடக்கம்

| | | | பக்கம் |
|---|---|---|---|
| | பதிப்புரை | ... | 5 |
| 1. | நான் கண்ட தாகூர்! | ... | 9 |
| 2. | கம்பர் கவிதை | ... | 24 |
| 3. | ஆங்கிலக் கவி கீட்ஸ் | ... | 34 |
| 4. | ஷெல்லி | ... | 51 |

# நான்கு கவிமணிகள்

## 1. நான் கண்ட தாகூர்!

சிறு வயது முதல் கவி தாகூரைக் காணவேண்டும் என்ற ஆவல் எனக்கு அதிகம் உண்டு. 1914-ல் தாகூர் திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரியில் 'வனத்தின் வாசகம்' (Message of the Forest) என்ற விஷயத்தைப் பற்றி நீண்ட சொற்பொழிவை நிகழ்த்திய போது, நான் சிறு பையனாய் இருந்தபடியால், அவருடைய வெள்ளிக்குரல் மட்டும் என் காதில் விழுந்ததைத் தவிர, ஆங்கிலச் சொற்பொழிவின் பொருள் ஒன்றும் எனக்கு விளங்கவில்லை.

அதன் பின் கவிஞரைக் காணும் சந்தர்ப்பம் செய்கோனில்தான் எனக்கு வாய்த்தது. இந்தச் சந்தர்ப்பத்தை, நான் நழுவவிடாது நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டேன். அவர் ஜப்பானிலிருந்து திரும்பி வரும்போது, இந்தோ-சைனாவில்—செய்கோனில்—அரசாங்க விருந்தினராய் வரவேற்கப் படுவார் என்ற விஷயம் தெரிந்தது. நானும் என் நெருங்கிய நண்பர்களும், கவிஞரைக் கண்டு பேசி, செய்கோன் தண்டாயுதபாணி கோயிலில் நாங்கள் நடத்திவந்த 'முருகானந்த வாசகசாலை' யின் முதலாவது ஆண்டுவிழாவுக்கு அவரைத் தலைமை வகிக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று முடிவுசெய்துகொண்டோம்.

21—6—1929-காலை 9-மணிக்குக் கப்பலில் வந்து இறங்கினார், நமது வங்கக் கவிஞர் **ரவீந்திரநாத் தாகூர்.** திரள் திரளாக ஜனங்கள் துறைமுகத்தில் வந்து குவிந்தனர். தாகூர் பன்மொழிப் புலவர் என்ற முறையில், கவிஞருடன் ஒரு 'லேடி டாக்டர்' பிரெஞ்சில் பேச ஆரம்பித்தாள். கவிஞருக்குப் பிரெஞ்சு எழுதத் தெரியுமே யொழிய, பேசத் தெரியாது. கவிஞருடன் கூட வந்திருந்த பேராசிரியர் **சந்தா**, கவிஞரின் காரியதரிசியாய் இருந்தார். அவர் கல்கத்தா இராஜதானிக் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராய் இருந்தவர்: அவருக்குப் பிரெஞ்சு பாஷையிலும் புலமை யுண்டு; நயமான உச்சரிப்புடன் அவர் அருமையாக பிரெஞ்சு பேசுவார். கவிஞருக்குத் துணையாகச் சகல சம்பாஷணைகளையும் அவர் நடத்தினார். உடனே பெரிய ஜனக்கூட்டத்தின் மத்தியில் போட்டோ எடுக்கப்பட்டது.

அதன் பின் கவிஞர் அன்னங்காரராகிய (Annamite) ஒரு நண்பருடைய மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அந்த நண்பர் முன்னால் கல்கத்தாவுக்குப் போய் வந்தவர்; தாகூரையும் அவருடைய சாந்திநிகேதன் சர்வகலாசாலையையும் முன்னமேயே நேரில் கண்டறிந்தவர். கவிஞர், அங்கு வந்ததும், திடீரென்று கவிதா சன்னதம் தோன்றி, மனத்தில் வந்ததை உடனே எழுத வேண்டுமென்று காகிதம் கேட்டார். 'பேப்பர்' (Paper) என்று ஆங்கிலத்தில் சொன்னதால், பிரெஞ்சு எல்லையில் ஒருவருக்கும் புரியவில்லை. 'பபியே' (Papier) என்று பிரெஞ்சில் சொல்லியிருந்தால், உடனே காகிதம் கிடைத்திருக்கும்.

நான் அப்போது சமீபத்தில் நின்றுகொண்டிருந்தேன்; உடனே என் பையிலிருந்த காகிதத்தை எடுத்துக் கவிஞர் கையில் கொடுத்தேன். அவர் அன்புடன் வாங்கிக்கொண்டு, என்னை உடனே பக்கத்தில் உட்காரும்படி கூறினர். அவ்வண்ணமே நானும் அமர்ந்தேன். அவர் மனத்தில் எழுந்த கருத்தை, உடனே எழுதி முடித்துவிட்டார். அந்த மாளிகையில், கவிஞரைப் புகைப் படம் எடுத்தார்கள். ஹனோயிலுள்ள (Hannoi) ஒரு தொங்கின் அன்னங்காரன் (Tonkin Annamite) கவிஞரைப் பார்த்து, கையாலேயே ஒரு படம் எழுதினன். கவிஞரைச் சுற்றி நான்கு மூலைகளிலும் நின்று தோற்றத்தைக் கவனித்துப் பத்துநிமிஷங்களில் சித்திரத்தை அபூர்வமாகவே வரைந்து முடித்துவிட்டான்! கலையாவேசமுள்ள கவிஞர், இதைக்கண்டு வியந்து, படத்தில் தம் கையெழுத்துமிட்டாரர். கவிஞரின் உருவத்தையும் தேஜஸையும் புகைப் படத்தைவிட, இந்தப் படம் தெளிவாகவும் கம்பீரமாகவும் விளக்கிக் காட்டியது.

எங்கள் முருகானந்த வாசகசாலை விழாவுக்குத் தலைமை வகிக்க வேண்டும் என்று நான் கவிஞரிடம் தெரிவித்துக்கொண்டேன். மறுநாள் ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு வருவதாக ஒப்புக்கொண்டார். இந்த அளவு அவர் சம்மதித்ததைப் பற்றி எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி! இதைக் கேட்டு வாசகசாலைக் காரியதரிசி நண்பர் திரு. பழ. குமு. குமரப்பசெட்டியாரவர்களும் மிகக் குதூகலமடைந்தார்கள்.

சனிக்கிழமை மாலை 5 மணிக்கு முனிசிபல் கட்டிடத்தில் அரசாங்க விருந்தினராகக் கவிஞர் வரவேற்கப்பட்டார். அதே இரவு 9 மணிக்குப் பொது ஜனங்களின் வரவேற்பு, முனிசிபல் தியேட்டரில் (Theatre de Municipal) ஏற்பாடாகியிருந்தது. ஹிந்து-முஸ்லீம்களின் சார்பாகக் கவிஞருக்கு நமது தாய்மொழியான தமிழில் வரவேற்பு அச்சடிக்க வேண்டியதிருந்தது. தமிழ் அச்சகம் செய்கோனில் கிடையாது. 15 வருஷங்களுக்கு முன்னதாக ஒருவர் அங்கு தமிழ்ப் பத்திரிகை நடத்துவதற்காக வரவழைத்து வைத்திருந்த ஈய எழுத்துக்களைத் தேடிப்பிடித்து, அவைகளைப் பெட்ரோலில் நனைத்துச் சுத்தஞ்செய்து, பழைய எழுத்துக் கோப்பாளர் ஒருவரைக் கண்டுபிடித்து, தமிழில் வரவேற்புப் பத்திரத்தைப் பிரயாசையுடன் நல்ல முறையில் தயாரித்து விட்டோம்; தங்க நிறமான பட்டு லேஞ்சில், தமிழ் வரவேற்பை அச்சடித்துத் தயாராக வைத்திருந்தோம். முனிசிபல் தியேட்டர், மிக அழகான தோற்றமுடைய கட்டிடம்; 15 லட்சம் டாலரில் அது கட்டப்பட்டது; பிரஞ்சுக்கலை அன்னங்காரரின் கலையுடன் இணைந்து வர்ணச்சித்திரங்களாக அதில் பரிணமித்திருந்தது; மின்சார வசதி இரவைப் பகலாக்கியது! வரவேற்புப் பத்திரத்தை வாசித்துக் கொடுப்பதற்கும், தாகூரின் ஆங்கிலச் சொற்பொழிவைத் தமிழில் மொழி பெயர்ப்பதற்கும், இந்தியர்கள் (ஹிந்து-முஸ்லீம்கள் மட்டும்) என்னைக் கேட்டுக் கொண்டார்கள்; நானும் இணங்கினேன். ஆனால் எனக்கு உள்ளுக்குள் பயந்தான்; கவிஞர் காவிய நடையிலோ

அல்லது வசன காவியத்திலோ சரளமாகப் பேசும் உயர்ந்த கருத்துக்களை, உடனே மொழி பெயர்க்க முடியுமா என்ற சந்தேகம் உண்டுதான்; இருந்தாலும், என்னுடைய இயற்கையான தைரியம் துணை செய்தது. முன் *'கீதாஞ்சலி' போன்ற தாகூரின் நூல்களைப் படித்து அறிந்து அனுபவித்த முறையில், என்னுள் மனோதிடம் உதயமானது.

பிரஞ்சு, அன்னம், சீனம், தொங்கின், கொக்னி, ஆங்கிலம், தமிழ் ஆகிய பல மொழிகளில் கவிஞருக்குப் பற்பல வரவேற்புப் பத்திரங்களைப் பொது ஜனங்கள் வாசித்துக் கொடுத்தார்கள்.

முதலில் நான் தமிழ் வரவேற்புப் பத்திரத்தை வாசித்து, பட்டு லேஞ்சை வெள்ளிப் பேழையில் வைத்துக் கவிஞர் கையில் கொடுத்தேன். கவிஞர் ஆச்சரியப் பட்டார்; முகத்தில் ஒளி படரும்படி சிரித்தார்! எல்லா வரவேற்புப் பத்திரங்களையும் வாசித்து முடித்ததும் அவர், ஆங்கிலத்தில் சுமார் பத்து நிமிஷங்கள் பொன் மொழியில் பதிலளித்தார்; அதைத் தமிழில் மொழிபெயர்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. மற்றவர்களும் அவரவர் களுடைய தாய் மொழிகளில் மொழி பெயர்த்துச் சொன்னார்கள்; குழுமியிருந்த ஜனங்கள், விஷயத் தைக் கேட்டு மகிழ்ந்தார்கள். இந்தப் பிரசங்கத்தில் இந்தியாவுக்கும் இந்தோ-சைனாவிற்கும் உள்ள பழைய சரித்திரத் தொடர்பு ஞாபகத்திற்கு வருகிறதென்றும், இந்தியாவின் கல்வியும் கலையும் இந்தோ-சைனா

* கீதாஞ்சலியை நான் தமிழில் மொழி பெயர்த்துத் தனி நூலாக வெளியிட்டிருக்கிறேன்.

விலும் ஆழமாகப் பரவியிருக்கிறதென்றும், பழைய கலைச் செல்வங்கள் இப்போது மறைந்துவிட்ட நிலை வருந்தத்தக்க விஷயமென்றும், இந்தியாவின் புராதன நாகரிகக் கலையுலகிலிருந்தே கவிஞர் உதயமாகி வருவதாகவும், இந்தோ—சைனா ஜனங்களின் சுக துக்க உணர்ச்சிகளில் தமது உள்ளம் என்றும் அநுதாபத்துடன் லயித்திருப்பதாகவும்உணர்ச்சியுடன் பேசினார்.

*[செய்கோன் முனிசிபல் நாடக மேடையில் 21-6-1929-ல் கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் நிகழ்த்திய உருக்கமான ஆங்கிலச் சொற்பொழிவையும், அதன் தமிழ் மொழிபெயர்ப்பையும் இதனடியில் தருகிறேன் :]*

அன்பீர்!

பல யுகங்களையும் தாண்டி என்றால் சில உண்மைகளைக் காணமுடியும். பண்டைய காலத்தின் கனவு மீண்டும் என் மனத்தில் தோன்றுகிறது; இந்த நாட்டிலும், அதன் கைரேகை நின்று நிலவுகிறது; அதே கனவு எனது இரத்தத்திலும் இன்றும் ஓடிக்கொண்டிருக்கிறது. உங்கள் மனத்தில், ஒரு சந்திப்பு முன் நிகழ்ந்ததை நினைவுறுத்த நான் முன் வருகிறேன்: அதே சந்திப்பில் தான், இந்த தேசம் விழிப்புற்று, கலையெழுச்சியிலும், சிந்தனைச் செல்வத்திலும், மறு மலர்ச்சி எய்தியது! இன்று நம்மால் அறிந்து கொள்ளமுடியாத, மறைந்து போன ஏடுகளில், பழைய யுகம் மௌன முற்றிருக்கிறது; காலவெள்ளத்தில் சுழன்றோடி மறைந்து கிடக்கும் மாணிக்கமே, அது! இரத்தினத்தை இழந்தபின் வெளியே கிடக்கும் காலிப் பெட்டி போல, அஃது இப்போது காட்சியளிக்கிறது!

அழிந்த நிலையிலும், அதன் சிறப்புத் தோன்றுமை லில்லை. இந்தியாவின் இதயம், இதே வானத்தின் கீழ் சூரிய ஒளியில் முன்னமே துடித்துக் கொண்டுதான் இருந்திருக்கிறது; அழகில் கலைக் கனவுகண்டு, தன் செல்வக் கருத்துக்களை எங்கும் வாரி வழங்கி, அதன்பயனாக வந்திருக்கும் விளைவுகளைக் கண்ணுற ஆவல்கொண்டே நிற்கிறது. நாகரிகப் பண்பாட்டிலும், தக்க முறையில் வளர்ந்து செயலாற்றியிருக்கும் இந்தியா, என் போன்று உருவெடுத்து, தனது பண்டைய நாடான இப்பகுதிகளுக்கு மீண்டும் வந்திருக்கிறது! இந்தியத் தாயின் பழமையிலிருந்து தோன்றியிருக்கும் அவளுடைய தூதன் நான்! உங்கள் கதவண்டை நின்று கொண்டு, என்னை அடையாளம் தெரிந்து வரவேற்று, தங்கள் இதயத்திலும் எனக்கு இடம் தரும்படி கேட்கிறேன்; உண்மையாகவே, இப்போது பழைய சரித்திரம் மங்கிவிட்டது; மனித ஒருமையைக் கொண்டாட முதல் முதலாக ஏற்றிய அந்தி விளக்கு அணைந்து விட்டது. நண்பர்களே! பழைய தலைமுறைகளில், இதே வானத்தின் கீழ், மணம் வீசும் மரத்தின் நிழலடியில், வசந்தத்தை வரவேற்றும், மௌன நட்சத்திரப் பொலிவின் கீழ் காதலைப்பற்றிப் பாடியும், தங்க ஒளி பரப்பி வரும் அருணோதயத்தைப் பற்றிப் பாடியும், மாலையில் மேற்குக் கடலில் மூழ்கி மறையும் அஸ்தமனத்தைப் பற்றிப் பாடியும் சென்ற உண்மைக் கவிஞர் கூட்டத்தைச் சேர்ந்தவனே, நான்! பண்டைய காலத்தில், எனது முன்னோர்கள் உங்களிடையே எப்படி இன்ப துன்பங்களைப்

பாட்டில் இசைத்து அனுபவித்தார்களோ, அதே போலவே எனது இதயத்திலும் இன்று இன்ப துன்ப நிகழ்ச்சிகள் பாட்டிசைக்கின்றன! இதையும் நீங்கள் நன்முய் அறியவேண்டும். ஒளி, காதல், சுதந்திரம் இவற்றைப்பற்றிய உயர்ந்த மனித ஆர்வங்களையும் லட்சியங்களையும் காப்பாற்றவே எனது பாடல்கள் எழுகின்றன! மிகக் கேவலமான முறையில் நிகழும் கொடுமையையும் சுயநலத்தையும் ஒழிக்க முயலும் உத்தமத் தியாகியின் தெய்வத் தொண்டின் வெற்றியையே நான் பாடுகிறேன். இந்த நாட்டிலே முன் அறிவுச் செல்வத்தை வாரி வழங்கிய ஒளி நிறைந்த புகழ்பெற்ற இந்தியா தேசத்திலிருந்தே உங்களுக்கு நான் வாழ்த்துச்செய்திகள் கொண்டு வந்திருக்கிறேன்! தற்கால இந்தியாவிலிருந்து, உங்களுக்கு அவளுடைய ஆழ்ந்த அனுதாபத்தையும் தோழமையையும் கொண்டு வந்திருக்கிறேன்! இந்தியாவுக்கும் உங்களுக்கும் உள்ள இந்தத் தொடர்பை, பூகோள அமைப்பால் வெட்டிவிட முடியாது; இந்தியா இப்போது எவ்வளவுதான் புகழ் குறைந்து மங்கிக்கிடந்தாலும், உங்களுக்கும் இந்தியாவுக்கும் உள்ள கல்வி, கலை முதலிய தொடர்புகளை யாராலும் வெட்டி எறிந்து விடமுடியாது.'' [தாகூரின் ஆங்கிலப் பேச்சு, மிக ரஸமானது; அதைக் கீழே தருகிறேன்:]

*Friends!*

I can see across centuries, and a vision comes to me of a life which has left its signature in this land and which still flows in my blood. I bring

the memory of a meeting to you—a meeting which awakened the soul of this country into a new path of fulfilment with its wealth of ideas and arts. That Age is silent today among the torn leaves of records difficult to decipher: it is like a gem that Time has stolen away, only the casket of it lies in magnificent ruins. The heart of India once throbbed under the sunny skies of these shores, and dreamed its dreams in beauty and scattered its thoughts for a rich harvest of culture in an alien land. I feel that the India of these days has come in my person to visit once more her forsaken home which has such association of years of achievements and growth of a civilisation. I am a messenger from her past. I stand by your door, seek a seat in your heart and ask you to recognise me, even now when that history has grown dim and the lamp that was lighted in the first festival evening of union bears no flame. My friends, know me to be one who belongs to that generation of poets who one day under the perfumed shade of your own trees offered welcome to the first arrival of Spring, who sang of love under your silent stars, who chanted the praise of the golden-veiled dawn and the last vanishing light across your western sea. Know that my heart beats in the same rhythm of human joys and sorrows, as those of my forerunners did who in the remote past lived among you. My voice ever is for the aspiration of men for light and love and liberty, for the triumph of the divine martyr over all that is basely cruel and meanly selfish. I bring you the greetings of that radiant

India who lavished her light of mind on this land, and the message of sympathy and fellowship from the present-day India who lives separated from you by the distance of geography and the lightless isolation of her own obscurity." (*Tagore's speech at the Municipal Theatre, Saigon on 21—6—1929.*)

கவிஞரின் தங்கமணிக் குரல், நாத அலையாகவே எழுந்து குதித்தது! அதைக் கேட்ட ஜனங்களின் இதயத்தில் சாந்தம் தவழ்ந்தது; அதில் கவிதையின் 'ஜீவு ஜீவுப்பு' சுழன்றோடுகிறது; உயிர்ச் சொற்கள் ஜீவகளையுடன் கவிஞரின் உள்ளத்தையே பிரதிபலிக்கின்றன!

மறுநாள் மாலை 5 மணிக்கு எமது வாசகசாலை ஆண்டுவிழாவுக்குத் தலைமை வகிக்கக் கவிஞரை அழைப்பதற்கென, நானும் காரியதரிசியும் சென்றிருந்தோம்; ஒருமணி நேரம முன்னதாகவே போய்விட்டோம்; கவிஞரோடு அரைமணிநேரம் பேசிக் கொண்டிருந்தோம். கவிஞருடைய பக்கத்தில் உட்கார்ந்திருக்கும்போது, அவருடைய சிறந்த தோற்றத்தைக் கண்டுகண்டு வியந்த வண்ணமாயிருந்தேன்: கவிஞரின் உடல் தந்தச் சிற்பம்போல் தோன்றியது; ஒளி நிறைந்து கனவு காணும் அவரது கண்களில் கவிதை மின்னிற்று! நீண்டடர்ந்து தவழும் வெண்ணிறத் தாடி வேதரிஷிகளின் தோற்றத்தை அளித்தது; பூங்காற்றில் நெளிந்தாடும் வெண்சாமரம் போன்றிருந்தது. இந்தக் கம்பீரமான அருளுருவின் திருவுள்ளத்தில் தான் கவிதை வளர்ந்திருக்கிறது என்று முடிவுகட்டினேன்: சம்பாஷணை அதன்பின் வேகமாய் நிகழ்ந்தது; நாங்கள் ஆங்கிலத்திலேயே பேச நேர்ந்தது:

**நான்:**—தங்களுடைய கீதாஞ்சலியை நான் படித்தனுபவித்தேன்; மதுரமான ஆங்கில நடையில் உபநிஷத்வாசனையுடன், கருத்துக்கள் சுழல்கின்றன!

**கவிஞர்:**— கீதாஞ்சலியை, நான் என் தாய் மொழியான வங்கத்தில் இசைச் சிறப்புடன் பாடினேன்; உலகம் அறியவே அதை ஆங்கிலத்தில் வசனகாவிய நடையில் மொழி பெயர்த்தேன். ஆனால், என்னுடைய ஆங்கில மொழிபெயர்ப்பில், வங்க மொழியிலுள்ள பல இசைநயங்களை நுட்பமாக வடித்தெடுத்துக் காட்டமுடியவில்லையே என்று வருந்துகிறேன்!

**நான்:**— தாங்கள் 'நோபல் வெகுமதி' (Nobel Prize) பெற்றதில், இந்தியாவுக்கும் இந்தியர்களுக்கும், உலக இலக்கிய அரங்கில் நல்ல புகழ் வந்துவிட்டது!

**கவிஞர்:**— உண்மை! ஆனால், எனக்கு அது ரொம்பக் கஷ்டமாயிருக்கிறது; ஜனங்களுடைய தொந்தரவு பொறுக்க முடியவில்லை. என்னுடைய இதயம் கவிதா சாந்தியை இழந்துவிட்டது; பல கடிதங்கள், பல வரவேற்புகள், விழாத் தலைமைகள், எல்லாம் என் உள்ளத்தின் இயற்கை அமைதியைக் குலைத்துவிட்டன; எனது கற்பனை உலகம், வெடித்துப் பாழாகிவிட்டது!

**நான்:**— தங்கள் சர்வ கலாசாலையில், தமிழுக்கு இடம் உண்டா?

**கவிஞர்:**— தமிழ்ப் பகுதியை இன்னும் ஏற்படுத்தவில்லை. உலக பாஷைகள் எல்லாம் எனது சர்வ

கலாசாலையில் இடம் பெற்றுவிடவேண்டும் என்பதே என் அவா. தமிழ்ப் பயிற்சி அளிப்பதற்கும், தென் இந்திய நடனக் கலை சொல்லிக் கொடுப்பதற்கும் அநுபவமுள்ள, திறமையான ஆசிரியர்கள் வேண்டும். தமிழைக் கற்றுக் கொடுக்க வேண்டுமானால், தமிழ் ஆங்கிலம் இரண்டிலும் திறமையுள்ள ஓர் ஆசிரியரே எனக்கு வேண்டும்.

**நான்:**– சென்னை '**நவசக்தி**' ஆசிரியர் **திரு. வி. கலியாணசுந்தர முதலியார்** போன்றவர்களே, அத்தகைய உயர்ந்த மொழித் தொண்டாற்ற முடியும். ஆனால், அவர் இசைந்துவருவாரா என்று நான் கேட்டுத்தான் சொல்லவேண்டும்.

**கவிஞர்:**– எனக்கும் தமிழ் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆவல் உண்டு. **அது ஓர் உயர்ந்த உலக மொழியாகக் கூடிய ஆற்றல் உள்ள பாஷை** என்று கேள்விப்பட்டிருக்கிறேன். எனக்குத் தமிழ் தெரிந்திருந்தால், நாம் இருவரும் தமிழிலேயே இன்னும் நயமாகப் பேசிக்கொள்ளலாம். அல்லது, உங்களுக்கு வங்கமோ ஹிந்தியோ தெரிந்தாலும், அதேபோல இன்பமாகப் பேசலாம். அந்நிய மொழியில் ஓரளவு எழுதலாமே யொழிய, சம்பாஷணை செய்வது இயற்கைக்கு விரோதம் அல்லவா?

**நான்:**–ஆம், ஆம்!

['என்னுடைய ஷெல்லி' என்று நான் ஆங்கிலத்தில் எழுதிய ஆராய்ச்சிப் புத்தகம் ஒன்றைக் கவிஞரிடம் கொடுத்தேன். கொஞ்சம் படித்துப் பார்த்து விட்டு, மேலும் பேசினர்:]

**கவிஞர்:**– தெளிந்த ஆங்கில நடையில் உங்களுடைய ஆராய்ச்சி அமைந்திருக்கிறது. ரொம்பச் சந்தோஷம்! எனக்கும் ஆரம்பத்தில் 'ஷெல்லி' பைத்தியம் உண்டு!

**நான்:**– தங்களுடைய சர்வகலாசாலைக்குப் போதிய நிதி இருக்கிறதா ?

**கவிஞர்:**– சிதம்பரம் அண்ணாமலை சர்வகலாசாலைக்குச் செலவழித்த பணத்தை, ராஜா சர் அவர்கள் என்னுடைய விஸ்வபாரதிக்கு நன்கொடையாகக் கொடுத்திருந்தால், நான் அதை இன்னும் சிறந்த முறையில் பயன்படுத்தியிருப்பேன்!

என்னுடைய செல்வமெல்லாம், விஸ்வபாரதிக்கே அர்ப்பணம் செய்திருக்கிறேன்; 'கீதாஞ்சலி' முதலிய நூல்களில் கிடைத்த பணங்கள், நில விற்பனைப் பணம், நகைவிற்ற பணம்—எல்லாம் அதற்கே கொட்டிச் செலவிட்டிருக்கிறேன்! எனக்கு வயது 68-க்கு மேலாகிறது. இந்தத் தள்ளாத வயதில் இப்படி நான் உலகம் எங்கும் அலைந்து, எனது சர்வகலாசாலைக்கு நிதி சேர்க்கப் பிச்சை எடுக்கலாமா? இந்தியர்கள் இதை இன்னும் உணரவில்லை என்பதை நினைக்கும் போது தான் என் மனம் புண்படுகிறது.

இச்சமயம் மாலை மணி 4–50 ஆகி விட்டது. உடனே கவிஞரைக் காரில் அழைத்துக் கொண்டு, தண்டாயுதபாணி கோயிலுக்குப் போய்ச் சேர்ந்தோம். செய்கோனில் வட்டித் தொழில் செய்யும் செட்டியார்கள், கவிஞரை மேளதாளத்துடன் கோலாகலமாக வரவேற்றார்கள். அலங்காரமான தெய்வம், தண்டாயுதபாணியும் வயிரப்பட்டையில் மின்னிக் கொண்டிருந்தார். சுவாமிக்கு அணிந்திருந்த வயிர நகைகள் சுமார் 50,000-ம் டாலருக்கு மேல் மதிப்புள்ளவை. சுவாமியைச் சாதாரணமாக மலரால் அலங்காரம் செய்து பார்ப்பது நலமென்றும், வயிர மூட்டையைக் கல்வியாக மாற்றவேண்டுமென்றும் கவிஞர் என்னிடம் வற்புறுத்திச் சொன்னார்.

வாசகசாலையின் விழா ஆரம்பமாயிற்று. தமிழில் வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்தோம்; விச்வபாரதி நிதிக்காக, 2,601 டாலர்கள் வசூலாயிற்று. கவிஞர் சந்தோஷப்பட்டு, நகரத்தார்களுக்கு நன்றி செலுத்தி, அவர்களுடைய சாசுவதமான தருமச் சிந்தனையைப் புகழ்ந்து பேசினார். வித்தியா தருமம் விசேஷம் என்றும், அதை வளர்க்க இந்தியர்கள் முயலவேண்டுமென்றும், கல்வியில் உயர்ந்த நிலையடைந்தால், உலகத்தில் இந்தியருக்கு மதிப்பும் சுதந்திரமும் உயருமென்றும், தேசீய அறிவு அவசியமென்றும், எதையும் தாய்மொழிமூலம் அறிவது சுலபமென்றும் வற்புறுத்திப் பேசினார். சில இந்தியப் பெண்கள் இனிமையாய்ப் பாடியபின், கூட்டம் முடிந்தது. அன்று இரவும் மறுநாளும், தாகூர் எங்களுடைய விருந்தினராகவே இருந்தார்; நாங்கள்

தயார்ச் செய்த உணவை, அமைதியாக நன்கு ருசி பார்த்தே சுவைத்து அருந்தினர். கனிகளில் அவருக்கு விருப்பம் அதிகம்; கனிகளைச் சுவைக்கும்போது, கவிதைக் கனியையும் அவர் சுவைத்தில் புறுவதாகக் கண்டேன்!

கவிஞரின் கையெழுத்து வாங்க ஏராளமான ஜனங்கள் வந்து கூடிவிட்டார்கள். போட்டோ படங்களிலும், சித்திரங்களிலும், வரவேற்புத் தாள்களிலும், பட்டு லேஞ்சுகளிலும் ஆயிரம் முறை கையொப்பம் வைத்திருப்பார். பொது ஜனங்கள் பெருமகிழ்ச்சியடைந்தார்கள்! திங்கட்கிழமை இரவு 12 மணிக்குக் கப்பல் புறப்பட்டது. சீனர்கள் கவிஞருக்குக் கப்பலில் விருந்து வைத்து, நிதியும் கொடுத்து, அன்புடன் உபசரித்து வழியனுப்பினார்கள்.

இன்று நம்மிடையே தாகூர் இல்லை: ஆனால், அவர் அன்புடன் வளர்த்த **விஸ்வபாரதி**, தாகூர் வாணியின் சின்னமாக உலகில் நின்று விளங்குகிறது!

## 2. கம்பர் கவிதை

கம்பர், ஒரு கவிதா தீபம்; அவர் மகா கவிகளில் ஒருவர். அவர் கவி, மிகவும் சிறப்பு வாய்ந்தது. அவர் உண்மைக் கவிதையை உணர்ந்தவர். உண்மைக் கவிதை யாது? அழகுதான் கவிதை; உண்மைதான் கவிதை. வெறும் வார்த்தைகள் செறிந்தது கவிதையன்று. அழகையும் உண்மையையும் ரசிப்பவனே உண்மைக் கவிஞன்.

அழகுச் சுடர், ஒரு கவியின் சன்னதம் நிறைந்த அகக்கண்ணில் ஒளிபரப்பி, ஓசை வடிவமாகின்றது. கவி ஹிருதயம், தனிப்பட்ட பண்புடையது. கவியின் கண்ணுக்குத் தோன்றும் காட்சியெல்லாம் அற்புதங்களாய் அமைகின்றன. ஒரு பறவையை எடுத்துக்கொள்வோம்: கவியினுடைய கண்ணுக்கு அது பல தோற்றங்களை அளிக்கிறது. அது ஜிவ்வென்று சிறகடித்து விண்ணிற் பறக்கும்போது, சிறகற்ற மனிதனைக் கண்டு நகைப்பதுபோலத் தோன்றுகிறது. என்ன அழகு! அஸ்தமிக்கும் சூரியன், கொலைக்களமாக உலகத்தைச் சித்தரிக்கிறான். சந்திரிகை, காதலைக் கிளறி, உணர்ச்சிக்கடலின் கொந்தளிப்பை வளர்க்கிறது. இரவு, மௌன விழாவைக் கொண்டாடுகிறது. நட்சத்திரங்கள், ஒரு கவியின் உள்ளத்திற் புகுந்து ஜோதிச் சுடர் வீசிச் சொற்சித்திரங்களாக வந்து குவிகின்றன. கவி ஹிருதயம், இயற்கையைப் படமாகப் பிடிக்கிறது.

கம்பரிலிருந்து ஒரு கற்பனைச் சித்திரத்தை, இயற்கைக் காட்சியை எடுத்துக்கொள்ளுவோம்: இராமன் முடிசூட்டு விழாவை அலங்கரிப்பதற்கு ஆகாய வீதியில் நட்சத்திரக் கூட்டங்கள், அழகிய பந்தர்போல் அமைந்து மின்னிப் பொலிந்தன. ஆனால், கொடிய கைகேசியின் தடையால் விழா நின்றதும், விழாவுக்குப் போட்ட பந்தரைப் பிரித்தது போல் நட்சத்திரங்கள் வானில் மறைந்து ஒழிந்தன!

"விரித்த பந்தர் பிரித்ததாமென
மீனொளித்தன வானமே!"

(அ. கா. கைகேயி சூழ்வினைப் படலம்)

இது கம்பரின் அற்புதச் சித்திரம். என்ன கற்பனை! எவ்வளவு அழகிய கவியோவியம்! எப்படி இன்பமும் துன்பமும் கலந்து காட்சியளிக்கின்றன என்பதைப் பாருங்கள்!

காதற் கனலால் உருகி வாடித் தயங்கி நிற்கும் சீதையின் உள்ளத்தில், அந்தி மாலை எழுப்பும் சிந்தனைக் கடல் ஆழ்ந்து நோக்கத்தக்கது. அவள் மனக் குழப்பத்தைப் பாருங்கள், கவி எப்படி வருணிக்கிறார் என்று! "ஆஹா! என்ன இருட்டு, கறுங்கும்மென்று இருக்கிறது! விஷம்தான் இப்படிக் கறுமை நிறத்துடன் வந்திருக்கிறதோ? அல்லது, நீலக்கடல்தான் இங்கு நீண்டு வந்ததோ? இராமன் நீல நிறமே இவ்விருளாய்ப் போந்ததோ? அன்றிக் காலன் நிறந்தான் இதுவாய்ச் சமைந்ததோ?

"என்னே! என் மனத்தைத் துன்புறுத்தும் இவ்விருளை எப்படி வருணிப்பது? தொலையாத இவ்

விருள், விடமாகவும் கூற்ருகவுந் தோன்றி, என் உயிரை மாய்க்கின்றதே; இராமன் நிறத்தை நினைவூட்டி வருத்துகின்றதே!" என்று சோர்வுக் கடலில் மூழ்குகிருள் :

"ஆல மூலகிற் பரந்ததுவோ?
ஆழி கிளர்ந்த தோவவர்தந்
நீல நிறத்தை எல்லாரும் நினைக்க
அதுவாய் நிரம்பியதோ?
காலனிறத்தை யஞ்சனத்திற்
கலந்து குழைத்துக் காயத்தின்
மேலும் நிலத்து மெழுகியதோ?
விளக்கு மிருளாய் விளைந்ததுவே!"

(பாலகாண்டம்—மிதிலைக் காட்சிப் படலம்)

இந்தக்கவி, ஒரு அற்புத சித்திர ரூபமாகக்காட்சியளிக்கிறதல்லவா? படிக்கும்போது படம் எழுத வேண்டுமென்ற நினைப்பு வருகிறது. ஆனல், 'ஐயோ' என்று எழுதுகோல் சாய்கிறது! எந்த ஓவியக்காரனும் இதனை எழுத முடியாதென்பது தெரிகிறது.

பொங்கும் இருளும், பொலியும் சந்திரனும், சீதையின் காதல் தீ நிறைந்த உள்ளத்தை எப்படி வாட்டுகின்றன பாருங்கள்! கம்பன் பாஷையில் இருள், கறு நெருப்பாகிறது; சந்திரிகை, வெண்ணெருப்பாகிறது. என்ன மாற்றம், உணர்ச்சி!

"ஓங்கா நின்ற இருளாய் வந்து
உலகை விழுங்கி மென்மேலும்
வீங்கா நின்ற கரு நெருப்பினிடையே
எழுந்த வெண்ணெருப்பே!"

இது ஓர் அபூர்வமான வாக்காகும்! கவியும் ஓசையும் இணைப்புடையவை. ஓசையுடைந்தால் கவியுடையும்; சொற்கள் சிதறும்போது எண்ணங்கள் சிதறும்; சொற்களின் ரீங்காரத்தில் எண்ணங்கள் பாடும்; இசை ததும்பும். யுத்தகாண்டத்தில் மூலபல வதைப் படலத்தில் உள்ள ஒரு கவியைப் பார்ப்போம்:

"படுமத கரிபரி சிந்தின;
பணிவரை இரத மவிந்தன;
விடுதிசை செவிடு பிளந்தன;
விரிகடல் அளற தெழுந்தன;
அடுபுலி அவுணர்தம் மங்கையர்
அலர்விழி யருவிகள் சிந்தின;
கடுமணி நெடிய வெனுஞ்சிலை
கணகண கணக ணெனும் தொறும்!"

இக்கவியின் இசை துள்ளிக் குதிக்கிறது; தாள அறுதி தெரிகிறது. யானை விழுகிறது; குதிரை சாய்கிறது; இரதம் ஒடிகிறது. யாவும் தவிடுபொடி யாகின்றன! எங்கும் பேரொலி! எங்கும் இரத்தப் பெருக்கு! எதிரிகள் யாவரும் மடிகின்றனர்; அவர்தம் மங்கையர் அழுது, கண்ணீர் வடிக்கின்றனர். சிலை நாண் 'கண, கண' என்ற சப்தத்தோடு ஒலிக்கும் ஒவ்வொரு க்ஷணமும் எங்கும் துடிதுடிப்பு; பரபரப்பு; கூக்குரல், அழுகை, அழுகை! கம்பர் சொற்கள் எப்படி வேகமாய்ப் பாய்கின்றன பாருங்கள்! இதுவல்லவா அமர்க்களம்? நல்ல சொற்போர்! இதற்கிணையாக எந்தக் கவியை ஒப்பிட முடியும்? இப் பாட்டில் கம்பர் மொழி உயர்கின்றது; பாய்கின்றது; துடிக்கின்றது; நகைக்கின்றது; மின்னுகின்றது; உலகத்தைச் சொல்லின்

மின்சாரத்தில் நடுங்கச் செய்கின்றது. இவைதான் மின் மொழிகள்! இந்த 'கண, கண' எனும் ஓசையைப் போல், ஷேக்ஸ்பியர் சொல் முழக்கம் ஒன்று நினைவிற்கு வருகிறது. "மாக் பெத்" (Macbeth) நாடகத்தில் மூன்று மந்திரவாதப் பெண்கள், பல ஜீவராசிகளைச் சோதித்துக் கொப்பரையிலிட்டுக் காய்ச்சும்போது, ஒலிக்கும் ஓசையைப் பாருங்கள்:

"Double double, toil and trouble;
Fire burn, and Cauldron bubble."

சீதையைக் காணாது இராமன், மனம் சுழல்கின்ற நிலையைக் கவனியுங்கள்; இது ஒரு விசித்திரம்:

"மண் சுழன்றது; மால்வரை சுழன்றது; மதியோடெண் சுழன்றது; சுழன்றது அவ்வெறிகடலேழும்;
விண் சுழன்றது; வேதம் சுழன்றது; விரிஞ்சன்
கண் சுழன்றது; சுழன்றது கதிரொடு மதியும்!"

எங்கும் சுழற்சி, எல்லாம் சுழற்சி! கவியே சுழல்கின்றது! நாமும் கவியுடன் சுழல்கின்றோம்; நம் மனமும் சுழல்கின்றது! ஒரு சன்னதக் கவியின் மின்னல் மொழி, சொல்லொக்கும் கடிய வேகச் சுடுசரம் போன்றது. கம்பர், இயற்கையின் இதயத்தில் ஆழ்ந்து உறங்கி விழித்துக் கவிதை வருவிக்கும் மனமோகன மின்னற்கவி; அவர் சொற்கள் இதயத்தின் தங்கக் குகையினின்று சுடர் வீசிக்கொண்டு பவனி வருகின்றன. மகா கவிகளுடைய திறன்களெல்லாம் கம்பரில் பிரதிபலிக்கின்றன. ஷேக்ஸ்பியரின் நாடகச் சுவையும், மில்டனின் காம்பீரியமும், பைரனின் விருவிருப்பும், கீட்ஸின் அணி நடையும், டெனிஸ

னின் இசையோவியமும், ஷெல்லியின் பாடி மிதந்து செல்லும் ஓடைநடையும், வேர்ட்ஸ்வொர்த்தின் சுடர் நடையும், ஹோமரின் வீராவேசச் சுவையும், விர்ஜீல், தாந்தேயின் அருளினிமையும், கம்பனில் கலந்து, குழைந்து இலங்குகின்றன. எனினும், இச் சுவையனைத்தையும் வென்று விளங்கி, நமது கம்பக் கவி, கடவுட் கவியாகச் சிந்தையுள் காட்சியளிக்கிறது!

ஷேக்ஸ்பியர், தமது நாடகப் பாத்திரங்களின் உள்ளத்தை நன்கு அளந்து, உணர்ச்சி விந்தைகளை நன்றாய் வெளிப்படுத்தி யிருக்கின்றார். "நீ விரும்பிய வாறு" (As you like it) என்ற நாடகத்தில் காதற்பித் தேறிய ஆர்லண்டோ, தன் காதலி ரோசலிண்டின் பெயரைக் காட்டு மரங்களின் பச்சைப் பட்டையில் பொறித்து வைக்கிறான்; அதே நினைவா யிருக்கிறான்; பிரிவாற்றாமையாற் பாடிய காதற்பாக்களைச் செடி களில் எழுதிக்கட்டுகிறான். ஏன் என்பதை எண்ணவே யில்லை; இது காதல் மயக்கத்தின் முடிவு! செடியும் கொடியும் மரமும் இவனுக்கு என்ன துணை செய்யும் என்பதை, இவன் கருதவே இல்லை. ஆனால் காதல் ஜபம் தான் அவன் மனத்தில் ஊறித் ததும்புகிறது; ரோசலிண்டு காதற் பெருக்கில் சிக்குண்ட உள்ளத் துடன் சொல்லுகின்றாள்:

"காதல் பித்தேறிய இளைஞன் ஒருவன், இந்தக் காட்டில் சுற்றி அலைந்துகொண்டு திரிகிறான்; அவன், "ரோச லிண்டு" என்ற பெயரை இளஞ்செடிகளின் முதுகி லுள்ள பச்சைப் பட்டைகளில், ஆழமாகச் செதுக்கி எழுதுகிறான்; வெள்ளைப் பூக்களையும், செந்நிறப் பூக் களையும் தாங்கிய முட்செடிகளில் இசைவெறி கொண்ட

எதுகையற்ற காதல் பாடல்களை எழுதிக் கட்டுகிருன்; பயனற்ற கிழான முட்புதர்களில் சோகம் நிறைந்த பாடல்களை எழுதித் தொங்கவிடுகிருன்; கற்பனை உலகில் அலையும் இந்த இளைஞனை நான் சந்திக்க நேர்ந்தால், நான் அவனுக்குத் தகுந்த புத்திமதி சொல்ல முடியும்; அவன் கொடிய காதல் ஜ்வரம் பிடித்து அலேகிருன்!''*

சீதையைத் தேடி இராமன் செல்லும்போது, அவள் பிரிவாற்ருமை கருதி மனமுருகிப் பேசும் ஓர் இடத்தை இங்கு ஒப்புநோக்குவோம்: ஒரு பொய்கை யைப் பார்த்து, "ஏ! பொய்கையே! சீதை முகம் போன்ற தாமரையையும், கண்போன்ற குவளை யையும் காட்டி என் மன வருத்தத்தை ஓரளவு மாற்றும் நீ, ஏன் வடிவம் முழுதும் காட்டக்கூடாது?" என்று தன் பரிவைப் பொய்கையின்பாற் புகுத்தி, மலர்களால் சிறிது மாற்றிக்கொள்ளுகிருன்:

'வண்ண நறுந்தாமரை மலரும்
வாசக்குவளை நாண்மலரும்
புண்ணி னெரியுமொரு நெஞ்சும்
பொதியு மருந்திற்றரும் பொய்காய்!
கண்ணு முகமும் காட்டுவாய், வடிவு
ஒருகால் காட்டாயோ?
ஒண்ணு மென்னினை தூதவாது
லோவிஞரு முயர்ந்தாரோ!"

"*There is a man haunts the forest that abuses our young plan with carving Rosalind on their barks; hangs odes upon hawthorns, and elegies on brambles; all, forsooth, deifying the name of Rosalind: if I could meet that fancymonger, I would give him some counsel, for he seems to have the quotidian of love upon him."

*("As You Like It"--Act. III, Scene-2')*

பிறகு மயிலோடு பேசுகிருன்: "ஏ மயிலே, உன் ஓட்டத்தின் பொருளும், ஆட்டத்தின் அர்த்தமும் எனக்கு நன்ருகத் தெரியும். சீதையின் சாயலுக்குத் தோற்றுப்போன நீ, இப்பொழுது பழிக்குப்பழி வாங்கியது போலல்லவா அவள் பரிதாபமான பிரிவைக் கண்டு சந்தோஷம் கொண்டாடுகின்ருய்? ஆயிரங்கண்ணுடைய நீ, அதை ஒளிக்க முடியுமா? சொல்! இப்பொழுதுதான் உனது உடல் குளிர்ந்தது போலும்! சீதை போனவழி தெரிந்துதான் என்னைப் பார்த்து மனமுவந்து ஆடுகிருய்!" என்று தன் துயரத்தை மயிலோடு பொருத்தி மயங்குவது எவ்வளவு சுவையாயிருக்கிறது, பாருங்கள்.

> " ஓடா நின்ற களிமயிலே! சாயற்
> கொதுங்கி உள்ளழிந்து
> கூடாதாரிற் றிரிகின்ற நீயுமாகங்
> குளிர்ந்தாயோ?
> தேடா நின்ற வென்னுயிரைத்
> தெரியக் கண்டாய்; சிந்தையுவந்து
> தாடா நின்ருயிரங் கண்ணுடையாய்க்
> கொளிக்கு மாறுண்டோ?"

ஷேக்ஸ்பியரின் "ரோமியோ-ஜூலித்" (Romeo and Juliet) எனும் நாடகத்தில், ரோமியோ ஜூலியட்டைப் பார்க்கும்போது, "ஆ! அந்த ஜன்னலின் வழியே வரும் ஒளி என்னே, என்னே! கீழ்திசை, கீழ்திசை! ஆம், ஆம்! உதய சூரியன், உதய சூரியன்! ஓஹோ, ஜூலியட், ஜூலியட்!" என்று அப் பெண்ணின் வருகையைச் சூரியோதயத்திற்கு ஒப்பிடுகின்ருன்: கம்பர், " சாளரந்தோறும் தோன்றும் சந்திர உதயங்

கண்டார்" என்று கூறுவது இதனுடன் ஒப்புநோக்கி இன்புறற்பாலது: மாதர்களுடைய முகங்கள் ஜன்னல் களின் வழியே சந்திரனைப்போல் மலர்ந்தன என்பது ஒப்பு.

இயற்கை, அறிவூட்டும் ஆற்றலுடையது என் பதை ஷேக்ஸ்பியரும் கம்பரும் அடிக்கடி வற்புறுத்து கிறார்கள். ஷேக்ஸ்பியர், "மரம் பேசுகிறது; கல் உபதேசிக்கிறது; ஓடையும் ஒரு நூலே!" என்று கூறு கிறார்:

"Finds tongues in trees,
Books in the running brooks,
Sermons in stones,
And good in every thing"

இயற்கையின் மொழியில் கவலை மாறி உண்மையின் ஒளியால் உள்ளம் பூரித்து உயர்கிறது. கம்பர், சீதை யின் அழகைக் கண்டு, கல் உருகுகிறது, புல் கசிகிறது குன்றும் கனிகிறது என்று கூறி அவைகளுக்கு உயி ரும் உணர்வும் ஊட்டி விடுகிறார். கம்பரின் சரயு நதி ஜீவநதியாகவும், நீதிச்சுரங்கமாகவும், தாய்ப்பாலாக வும் அமைகிறது. அமுதிற் கோல் தோய்த்து அவய வம் அமைக்குந் தன்மை யறியாது திகைக்கும் மத னுக்கும் எழுதவொண்ணுச் சித்திரத்தைக் கம்பர் புகழ்வதுபோல், ஷேக்ஸ்பியரும் தமது "ஒதெல்லோ" நாடகத்தில் டெஸ்டிமோனுவின் (Desdemona அழகை அருமையாக அமைக்கின்றார். "புகழ் மண் டிய நிகரற்ற டெஸ்டிமோனுவின் அழகைச் சிருஷ் டித்த சக்தியே! அழகு சமைக்கும் விந்தையில் ஈடுபட்

டுச் சோர்வடைந்தது என்னே!" என்று ஷேக்ஸ்பியர் கூறுவது ஒப்பு.

"(......a maid) That Paragons description and wild fame; One that excels the quirks of blazoning pens, and in the essential vesture of creation does tire the ingener."

டெஸ்டிமோனாவின் பெயரிலே ஓர் ஓசையின்பம் உயிரைத் தழுவி ஓடுகின்றது!

ஒரு மகாகவி, ஜீவநதி போன்றவன்; உலகத்தை உள்ளடக்கிய மாமுனி; அவனே தீர்க்கதரிசி; சௌந்தரிய ஞானி. கம்பர் கோதாவரி எனக்கிடந்த காவிரியாகிப் பொலிகின்றார்; அவர் தமிழுக்குச் செய்த உதவி, மிகப்பெரிதாகும். மேல் நாட்டில் ஷேச்ஸ்பியர் பழைய கவிகளை நன்கு கற்று, அவர்களுடைய காவிய ரத்தத்தில் ஊறி, உறங்கி விழித்தார். புதுக் கவி தோன்றிற்று. அதுபோல், கம்பரும் நம் நாட்டில் பழைய இலக்கியங்கள் பலவற்றையும் பருகி, புது இலக்கிய மறுமலர்ச்சியை உண்டாக்கினர். கம்பர் காவியம், ஓர் உணர்ச்சிக் கோபுரம்; அக் கோபுரத்தில் கவிதா தீபம் ஜோதியாய்த் திகழுகிறது; கம்பர் அருள் வாக்கில், கவிதாவாணி அருள் நடம் புரிகிருள்!

---

## 3. ஆங்கிலக் கவி கீட்ஸ்

### க. வரலாறு

கவிதை வானில் இளங் கவி ஜான் கீட்ஸ், ஓர் சிறந்த பேரொளி நட்சத்திரமாவான். 1795, அக்டோபர் 29-ல் இங்கிலாந்தில் லண்டனுக்கருகில் பிறந்து, 1821 பிப்ரவரி 27-வரை அவன் வாழ்ந்துவந்தான். அவனுடைய ஜீவியகாலம் 25 வருஷங்கள்தான். ஒன்பது வயதில் தந்தையை இழந்தான்; 15-வது வயதில் தாயை இழந்தான். ஐந்து வருஷங்களே, கவியின் இதயத்தில், நயமான கவிதைப்புயல் வீசியது. 16,000-ம் வரிகளுக்குமேல் அவன் பாடியிருக்கிறான்: 21-வது வயதுமுதல் 25-வது வயதுக்குள், கலைவாணியின் அருளால், அவன் உள்ளத்தில் கவிதை வெள்ளம் பொங்கி வழிந்தோடியது! 'கவிதையே உயிர்; அது இல்லாமல் தான் வாழவே முடியாது' என்ற உண்மையை அவன் நேரே அறிந்து உணர்ந்தவன். கவிதை நிறைந்த சொற்களையும், சொற்றொடர்களையும், பொன் வண்டாகவே கருதிக் காதலித்துப் பின்பற்றி ஓடித்திரிந்தான். லண்டன் சுற்றுப்புறத்தில் பிறந்த கீட்ஸ், லண்டனின் புகை மண்டலச் சந்தடியை மறந்து, கவிதையில் ஊறிக்கிடப்பதென்றால் அது மிகுந்த ஆச்சரியந்தான்.

அவனுடைய தந்தையின் பெயர், தாமஸ் கீட்ஸ்; லண்டன் சுற்று வட்டாரத்தில் "ஜென்னிங்ஸ்" என்பான் வைத்து நடத்திவந்த குதிரை லாயத்தில் வேலையில் அமர்ந்து, அதன்பின் ஜென்னிங்ஸ் மகளையே

மணம் புரிந்து, மாமனுர் சம்மதத்தின் பேரில் குதிரை லாயத்தை மனைவி துணையுடன் கவனித்துவந்தான், தாமஸ் கீட்ஸ். கவி ஜான் கீட்ஸுக்கு இரண்டு சகோதரர்களும், ஒரு சகோதரியும் உண்டு; கீட்ஸே முதலாவது மகன். அவன், தம்பி ஜார்ஜுடன் அன்போடும் ஆர்வத்தோடும் பழகிவந்தான். சிறுவயதில் கீட்ஸ் அடிக்கடி யாருடனும் வலியச் சண்டைக்குப் போவான்; கையில் கத்தியொன்று வைத்துக்கொண்டு யாரையும் பயமுறுத்துவான்; அவன் தாயினிடத்தில் அதிகமான அன்புகொண்டவன்; தாயின் உத்தரவை உடனே நிறைவேற்றுவான்.

பள்ளிப் படிப்பில் கீட்சுக்குக் கவிதையின் வாடையே தெரியவில்லை. ஏதோ, தண்டத்திற்குப் பள்ளிக்கூடத்துப் பாடங்களைப் படிப்பான். தலைமை உபாத்தியாயருடைய மகன் கிளார்க் என்பவன், ஷேக்ஸ்பியரில் ஊன்றித் திளைத்தவன்; அவன் கீட்ஸின் நெருங்கிய நண்பன். வகுப்புப் பாடத்தைப்பற்றி கீட்ஸுக்கு அவ்வளவு கவலையில்லை; பள்ளிக்கூட நூல் நிலயத்திலுள்ள புத்தகங்களையெல்லாம் சதா புரட்டிக்கொண்டும், நூதன விஷயங்களை விழுங்கிக்கொண்டுமே இருப்பான்; பிரயாணம்முதல் மருத்துவம்வரை எந்த நூலாயிருந்தாலும் எடுத்துப் படித்து இன்புறுவான். இவ்வாருக அவன் மனத்தில் புதுப்புது எண்ணங்கள் குவிந்தன.

தாயும் தந்தையும் இறந்தபின் படிப்பை நிறுத்திவிட்டு, சர்ஜன் ஹாமண்டு என்பவரிடம் கீட்ஸ் வேலைபார்த்தான். இரணசிகிச்சையைக் கண்டால்

கீட்ஸுக்கு வெறுப்பு அதிகம்; இருந்தாலும் பொறுமையாகவே வேலையைப் பழகிக்கொண்டான். ஓழிந்த நேரங்களில், பள்ளிக்கூட நூல் நிலையத்திலிருந்து புத்தகங்களை எடுத்துப் படித்து, அறிவை விசாலப்படுத்திக்கொண்டான். பிறகு, சர்ஜனோடு பகைத்துக்கொண்டு, வேலையைவிட்டு நீங்கி, லண்டன் சென்று டாக்டர் படிப்பும் படித்து முடித்தான். இருந்தாலும் இரணவைத்தியம் செய்ய வெறுத்து, அவனுடைய கவிதை உள்ளம் துடித்தது. இரணசிகிச்சை செய்து கட்டுக் கட்டும்போது, உள்ளம் உருகிக் கவிதையின் மறு முனைக்கு வந்துவிடும். இலக்கியப் பித்தும், கவிதைப் பைத்தியமும் வளர்ந்துவரவே, பழைய நண்பன் கிளார்க்கின் உதவியால், புதுப்புது இலக்கியங்களைக் கண்டுபிடித்து இலக்கியத் தேனைப் பருக ஆரம்பித்துவிட்டான்.

1816-முதல் 1821-வரை இலக்கிய நண்பர்களும், கலைப் பித்தர்களும், கீட்ஸின் நண்பர்களாகிவிட்டனர். கிளார்க், ஜான் ஹாமில்டன், ரெய்நால்ட்ஸ், செவேர்ண், லீ ஹண்ட் ஆகியோர் அக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். லீ ஹண்ட் என்பவன் அரசியல்வாதி, கவி, ஆராய்ச்சியாளன், பத்திரிகாசிரியன்; அவனே கீட்ஸின் கவிதைச் சிறப்பைக் கண்டு, பதினான்கு வரிகளுள்ள அவனுடைய இரண்டு பாடல்களைப் பொது ஜனங்களுக்கு எடுத்து விளக்கினான். ஹண்ட் நடத்திய பத்திரிகையில், இந்த மதிப்புரையும் வந்தது. ஹண்ட் யோசனைப்படியே, கீட்ஸ் தன்னுடைய கவிதைத் தொகுதியை வெளியிட்டான். ஷெல்லியும் ஹேய்டனும்கூடக் கீட்ஸின் நண்பர்களாகிவிட்

டார்கள். ஷெல்லி, கீட்ஸின் கவிதைப் பண்பை அறிந்து அனுபவித்தான், புகழ்ந்தான், அவனை ஊக்கினான்.

ஸ்பென்ஸர், ஷேக்ஸ்பியர், ஹோமர் முதலியோர் கவிதைகளை கீட்ஸ் இன்ப நிறைவுடனும், இதயச் சிலிர்ப்புடனும் படித்து அனுபவித்தான்; அவர்களைப்போல் தானும் அழியாக் கவிதை புனைய வேண்டுமென்று ஆசை கொண்டான். ஒருவனுடைய அறிவும் இலக்கியச்சுவையும் வளர்ந்து புத்தி வீசாலிப்பதற்கு, ஷேக்ஸ்பியரைப் படித்துக் கரைத்துக் குடித்தாலே போதும் என்ற உண்மையைக் கீட்ஸ் கண்டு, பிறருக்கும் எடுத்துக் கூறினான்; ஷேக்ஸ்பியர் நாடகங்களிலும், கவிதைப் பண்பிலும், மொழியோவியத்திலும், கதை ஓட்டத்திலும் ஊறிக் கிடந்தான். இளங்கவி கீட்ஸுக்கு ஷேக்ஸ்பியரின் நடையே இரத்தத்தில் கலந்து பரந்தது: சிற்ப நடையாகவே உதயமானது கீட்ஸின் கவிதை! இந்த நடை, தந்தச் சிற்பமோ என்று சிலர் வியப்புற்றனர்! சில இடங்களில், நடையின் வனப்பில் ஷேக்ஸ்பியரைக்கூட கீட்ஸ் எளிதில் மிஞ்சிவிட்டான் என்று சொல்லிவிடலாம்; இதில் ஒன்றும் தவறில்லை. நல்ல ஆராய்ச்சியாளருக்கு, இந்த உண்மை தெரியும். மட்டமான இலக்கிய ஆராய்ச்சியில், எந்த உண்மையும் நிறைமொழியாகத் தெரிவதில்லை. இது நான் கண்டு அனுபவித்த உண்மை: களங்கமற்ற ஆராய்ச்சியில் சூரியனின் சுடர்போல உண்மை, உதயமாகும்.

இரண வைத்திய வேலையை விட்டதும், கீட்ஸின் உடலை வியாதி பற்றிக் கொண்டது: க்ஷயரோகம்

கொஞ்சம்கொஞ்சமாகக் கவியின் உடலைக் கவ்வியது. 1820-ல் வியாதி முற்றியதும், வைத்தியர்களின் யோசனையின் பேரில், இதாலியின் அழகுச் செல்வமான நேபிள்ஸ் நகருக்குச் சென்று, இயற்கையின் வனப்பிலூன்றி சாந்தமும் ஓய்வும் பெறலாமென்று முயற்சித்தான், கீட்ஸ். நண்பன் சேவேர்ண் கீட்ஸுடன் இதாலிக்குச்சென்று துணையாக வாழ்ந்தான். நேபிள்ஸிலிருந்து ரோம் நகரம் சென்றதும், திடீரென்று வியாதியின் கஷ்டம் அதிகரித்தது; 1821 பிப்ரவரி 23-ல் கவியின் உயிர், உடல் அவன் கூட்டை விட்டுப் பறந்து போய்விட்டது. சாகுந்தருவாயிலும், கவி தாகூரைப்போல, மரணத்தைக் குறித்து ஒரு பாட்டுப் பாடிவிட்டான், நமது கவி கீட்ஸ். ரோமில் அவனுடைய உடல் ஒரு கல்லறையில் புதைக்கப் பட்டது. அதே இடத்தில் தான் சில வருஷங்களுக்குப்பின் ஷெல்லியின் சாம்பலும் சேமிக்கப்பட்டது.

கீட்ஸ் காதலித்த பானி பிரானி (FANNY BRAWNE) என்பாள் அவனுடைய மனத்தைத் திருப்தி செய்யவில்லை; அவள் உண்மையாக நடந்து கொள்ளவில்லை. கீட்ஸின் காதல் வீணானது; அவன்காதற் கனவுகள், கவிதைகளில் புகுந்து வேலை செய்தன. மனமோகனப் பெண் உருவங்கள், அவன் இதயத்தைச் சூழ்ந்துகொண்டு தொந்திரவு செய்யும் போது, கவிஞனின் உள்ளம் துடித்துக் குமுறும். கீட்ஸின் காதற் கடிதங்களில், பெண்களின் ரூபலாவண்யங்களை வெகு அருமையாகச் சித்திரித்திருக்கிறான். மிக நுட்பமான வருணனைகள் அனந்தமாகக் கவிதையில் புகுந்து விட்டன. அழகு, அழகின் ஜ்வாலை,

உண்மையின் கலைத்தீபம்—இவைகளெல்லாம் கீட்ஸின் மனத்தைப் பற்றிக்கொண்டன. "அழகே உண்மை, உண்மையே அழகு; இதைத்தவிர வேறொன்றும் நாம் உலகத்தில் அறிய வேண்டியதில்லை" என்ற காம்பீரமான முடிவுக்கு வந்துவிட்டான் கீட்ஸ். "துரும்பிலும் உள்ளும் புறமும் அழகு உண்டு; ஆத்ம விளக்கமும் ஆத்ம விஸ்தீரணமுமே, அந்தச் சௌந்தரியச் சிலிர்ப்பு" என்ற உண்மையை அவன் உணர்ந்திருந்தான்.

ஷேக்ஸ்பியரின் இலக்கிய ஆராய்ச்சிக்கு நாம் செய்திருக்கும் அபாரமான வேலை, கீட்ஸின் இலக்கிய ஆராய்ச்சிக்கும் செய்யப்படுமானால், புதுப்புது உண்மைகளை நாம் கண்டு பிடித்து உலகம் வியக்கும்படி செய்யலாம்! ஷேக்ஸ்பியர் 24-வருஷங்கள் நாடகக் கலையில் ஊறிக்கிடந்தார்; கீட்ஸின் உள்ளத்தில் ஐந்து வருஷங்களே கவிதைப் புயல் கடுமையாக வீசி, மாணிக்கங்களை உதிர்த்தது; அழியாத இரத்தினங்கள், ஜோதி முத்துக்கள், பல மின்னற் பட்டையிட்ட வயிரக்கோவைகள், அவனுடைய இதயச் சுரங்கத்திலிருந்து எல்லாம் எய்தின. கீட்ஸை மறப்பது அரிது; கவிதை மாளிகையில், இன்னும் அவனுடைய புகழுடம்பு கொலுவீற்றிருக்கிறது; அவனுடைய குயிலோசையனைய மணிக்குரல் கேட்கிறது; சொற்களின் சௌந்தரியப் பட்டையில், அவனுடைய கவிதைக் கண்கள் மிதக்கின்றன; ஆங்கிலக் கவிதை விண்ணில், கீட்ஸின் ஞாபகம் என்றும் சுடரோவியமாகவே மிளிரும்; இது மறுக்க முடியாத உண்மை; அவனது சாசுவதமான இலக்கியச் செல்வம், சிந்தனைச் சுரங்கமாகும்.

## உ. கீட்ஸின் கவிதை

கீட்ஸின் கவிதை தனிச் சிறப்புடையது: கீட்ஸைப் போல், அவனுக்குப் பின்வந்த கவிகள் யாரும் கவிதை புனையவில்லை; அவனுடைய கவி நடையை வேறொருவராலும் பின்பற்ற முடியாது. சிறந்த கலைப்பண்பு கொண்ட நடையிது; தந்தச் சிற்பம் போல உதயமாகும் இதய நடை; சொற்கள், பட்டைபோட்ட வயிரங்களாகக் கூடிக்களிக்கும் தன்மை கொண்டவை.

மண்ணில் கவிதை கொட்டிக் கிடப்பதை கீட்ஸ் கண்டான்; உள்ளம் பூரித்தான்! விண்ணில் நட்சத்திரங்கள் விளையாடுவதைக் கண்டான்; சந்திரன், அழகு ராணிபோலக் கொலு வீற்றிருப்பதைக் கண்டான்; குயில் களங்கமற்றுக் கூவுவதைக் கேட்டான்; மலர்களின் வனப்பையும் மணத்தையும் கண்டு முகர்ந்து பருகினான்; பெண்களின் ஓவியத் தோற்றங்களைக் கண்டு வியந்தான்; இயற்கையைக் காதலித்துத் தேனினுமினிய கவிதை பொழிந்தான்! ஐந்து வருஷங்கள், அவனுடைய கை, கலைவாணிக்குக் கவிதை மாலைகள் புனைந்து அணிந்துகொண்டிருந்தது!

பூனையைக் கண்டான்; 'வெல்வெட்' போன்ற அதன் உடலையும், ஒளி தெறிக்கும் கண்களையும், எலி வேட்டையில் தவழும் தந்திரக் கால்களையும் கண்டு வியந்தான். புலியைக் கண்டான்; அதன் விசித்திரத் தோற்றத்தை வியந்தான்; அதன் மொழியைத் தன் தாய்மொழிபோல உணர்ந்து அனுபவித்தான். சிங்கத்தின் கர்ஜனையையும், ஒரு சிறு கவி

யைத் துணுக்காகவே உணர்ந்தான். இதுதான் உண்மைக் கவிஞனின் உள்ளம்; இதுவே இயற்கையின் இந்திரசாலக் கண்ணுடி.

அவன் பாடிய 'எண்டிமியான்' (Endymion) எனும் நான்கு காண்டங்களில் 4000-ம் வரிகளில் அமைந்த பாடலில், காவியச் சிறப்பு வளர்ந்து தேங்கிக்கிடக்கின்றது. இளைஞன் எண்டிமியான், அழகுத் தெய்வத்தைக் கண்டு, பெண்தேவதையைக் காதலித்துத் தொடர்ந்து சென்று திரும்பிவந்த கதைதான் இது. இயற்கையின் வனப்பும், பெண் தேவதையின் சௌந்தரியமும், காதற்கனவும், மிக விசித்திரமான நடையில் பொங்கி வழிகின்றன. சிற்சில இடங்களில், கவிதை சிதறி வெடித்து மங்கியும் பொங்கியும் வருகிறது! 'அழகே நித்தியானந்தம்' என்ற பல்லவியுடன் பாட்டு ஆரம்பமாகிறது. பெண் தேவதையின் அழகை வருணிக்கும்போது, அழகின் தூய நிர்வாணத்தை நினைப்பூட்டுகிறான், இளங்கவி கீட்ஸ்; பெண்ணின் கொடிபோன்று வளைந்த காதுகளும், வெண்கழுத்தும், விற்புருவமும், செவ்விதழ்களும், சுடர்க் கண்களும், உறவாடும் சுவர்க்க நிலையும் கண்டு வியக்கிறான்; பெண்ணின் கூந்தலில் பதுங்கிக் கிடக்கும் காதற்புயலைக் கண்டு மகிழ்கிறான்; பெண்ணைக் காதலித்து இன்புறும் உயர்ந்த மன நிலைகளையும் மர்மங்களையும் விரித்துக் கூறுகிறான். பெண்குரலில் இசைத்தேனையே மொண்டு குடிக்கிறான்; காதற் கண்ணீரில், துக்கக் கடலையே அறிகிறான்.

இந்த 'எண்டிமியான்' பாடலைப்பற்றி, சில பத்திரிகைகள் துவேஷமாகக் கண்டித்து எழுதியும்,

கீட்ஸின் மனம் கலங்கவில்லை. கட்சி நோக்கத்துடன் எழுதும் மதிப்புரை பயன்படாது என்று அவனுக்குத் தெரியும். தன் கவிதையின் நயத்தையும் சிறப்பையும் தானே உணர்ந்து அனுபவித்தான். பிறர் அபிப்பிரா யத்திற்குப் பயந்து அவன் நடுங்கவில்லை. அவனுடைய எழுதுகோல், கவிதைச் சித்திரம் வரைந்துகொண்டே யிருந்தது; நண்பன் லீஹண்ட், கீட்ஸைப் புகழ்ந்து ஊக்கினான். கவிதை வளர்ந்தது, வளர்ந்தது, இடை யறாது வளர்ந்தது! பாரதியாரின் 'ஞான ரதம்' போல், கீட்ஸின் கீதங்கள் சிந்தனை விண்ணில் பறக்கின்றன.

இனி **'இஸபெல்லா'** (ISABELLA) என்ற கதைப் பாடலைப் பார்ப்போம்: பொக்காஷியோ எழுதிய வசனக் கதையைத் தழுவியது, இந்தப் பாடல். ஊரை மாற்றி எழுதியதைத தவிர, கதையின் அமைப்பு வேறு எவ்வகையிலும் மாற்றப்படவில்லை. ஆனால், இது ஒரு கோரமான காதற் கதைதான்; ஒரு பெண்ணின் தூய கற்பு நிலை, மிக அழகாக, உருக்கமாக அமைந்துவிடுகிறது. கதையின் சுருக்கம்: பிளாரென்ஸ் என்னும் ஊரில் இரண்டு வியாபாரிகள் இருந்தனர். சகோதரர்கள்; தொழில் செய்தார்கள்; அந்தத் தொழி லுக்குத் துணையாக வேலை பார்ப்பதற்கு லாரென்சோ என்ற இளைஞனை வேலைக்குச் சேர்த்தார்கள். இரண்டு சகோதரர்களும் வெளியூருக்குப் போகும் சமயம், அவர்களின் சகோதரி இஸபெல்லா, இளைஞன் லாரென்சோவைக் காதலித்தாள். காதல் முற்றி வளர்ந்தது. இந்த விஷயம் நீண்டநாள் தெரியாம லிருந்தது. ஒரு நாள் இந்த உண்மை தெரிந்ததும், இரண்டு சகோதரர்களும், சதியாலோசனை செய்து

கொண்டு, வேட்டைக்குப் போவதாகச் சொல்லி லாரென்சோவை அழைத்துக் கொண்டு புறப்பட்டார்கள். நடுக்காட்டில், திடீரென்று இரண்டு சகோதரர்களும் அவ்விளைஞனை வெட்டிப் புதைத்து விட்டு, வீடு திரும்பினார்கள். லாரென்சோவை ஏதோ வெளியூருக்கு வேலையாக அனுப்பியிருப்பதாகவும், வர நாள்செல்லும் என்றும், சகோதரியிடம் சாக்குச் சொல்லி விட்டுப் பேசாமலிருந்தார்கள். இஸபெல்லாவின் கவலை அதிகரித்தது. ஒரு நாள் அவள் கனவில், லாரென்சோ தோன்றி உண்மையை அறிவிக்கிறான். உடனே அவள் காட்டுக்குச் சென்று புதையுண்ட இடத்தில் வெட்டிப்பார்த்து, அவன் உடலைக் கண்டு பிடித்து, தலையை மாத்திரம் வெட்டி எடுத்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பி வருகிறாள். அந்த முகத்தைத் தன் கண்ணீரால் கழுவி, ஒரு பூந் தொட்டியில் புதைத்து வைத்து, அந்தத் தொட்டியில் அழகிய ஒரு செடியை வளர்த்தாள்; செடி ஓங்கி வளர்ந்து மணம் வீசிக் காதல் மணத்தை நினைவுறுத்தியது. இஸபெல்லா நிறைந்த பக்தியுடன் தன் காதலின் ஆத்மாவை இடையருது வணங்கி, தன் கண்ணீர் வெள்ளத்தால் அதைச் செழிப்புற வளர்த்தாள். இதை ஒரு நாள் கண்டு பிடித்த சகோதரர்கள், மனம் பொறுக்காமல் அதை உடைத்து உருவத்தைக் கண்டு மனம் பதறி, ஊரைவிட்டே ஓடிவிட்டார்கள். தனது ஆத்மார்த்தமான பூந்தொட்டியும் மாயமாய் மறைந்து விட்டதைக் கண்டு, அளவுக்கு மிஞ்சி வருந்திக் கண்ணீர் விட்டாள், காதலி இஸபெல்லா. இதே காரணத்தால், துக்கம் மேலிட்டு, அவளும்

இறந்தாள்; இது தான் கதை, கதை கீட்சின் கையில் கவிதையாக மாறும்போது, புது இலக்கிய வனப்பையே பெற்றுத் திகழ்கிறது. 504 வரிகளில், கவிதை சுழன்று சுழன்று, இந்தக் கதையை அலங்கரிக்கிறது. 'கணவனே தெய்வம்' என்ற உண்மையும், கற்பின் நிறை மங்காதிருக்கும் நிலையும், ஜாதி அந்தஸ்தை மீறிச் சீறி வளரும் காதலின் ஓவியமும், இந்தப் பாடலில் காணக் கிடக்கின்றன. அழகின் ஜ்வாலையும் பெண்மையின் உறுதியும், வீரமும், காதல் மொழியின் தேன் சுவையும், நம்மையே சூழ்ந்து விடுகின்றன. இன்பத்திற்கும் துன்பத்திற்கும் இடையே காதல்—உண்மைக் காதல்—உறக்கமின்றி ஊசலாடுகிறது; விதியின் இடிக்குரல் கர்ஜிக்கும் போது, மதியின் ஜோதி மங்கிவிடுகிறது!

கவிதை, கதை போலச் சரளமான நடையில் உணர்ச்சியின் வேகத்தில், மின்னிவருகிறது.

1819-ல் கீட்ஸ் எழுதிய '**குயில் பாட்டு**' (NIGHT IN GALE) மிக இனிமையான கட்டுக் கோப்புடன் அமைந்திருக்கிறது. உணர்ச்சியின் வேகத்தில் காவிய மாளிகை ஒன்று உருவமாகி, வெற்றிக் கோபுரமாய் உயர்ந்து நிற்கிறது. நடை செம்பாகமாய் வடித்தெடுக்கப் பட்டுள்ளது. கவிதையில், குயிலின் கீதம் இசைச் சிறப்புடன் பாடி மிதந்து வருகிறது. "இவ்வுலகம் ஒரு கொடிய உலகம், கவலை நிறைந்த உலகம்; இளமை, முதுமையை நோக்கி விரைகிறது; எங்கும் நோயும் கவலையும் குமுறிக் கொந்தளிக்க, மனித வாழ்க்கையில் கவிதையும் இசையும் தொடர்ந்து தோன்ற இடமில்லை; மூப்பாலும் நரையாலும்

மடியும் மனிதன், அழுதுகொண்டே மண்டையைப் போடுகிறான்; பாடவும் சிரிக்கவும் நேரமில்லை; பசை யறப் புலர்ந்த மனங் கொண்ட உடல் மரண முனையில் ஊசலாடுகிறது. சௌந்தரியம், நிமிஷத்தில் சாய்ந்து விடுகிறது; காதல் அரும்பியதும் வாடுகிறது; கண்ணுக்குத் தெரியாத கவிதைச் சிறகுடன், குயிலைக் கண்டு இன்புற எண்ணுகிறான், இளங்கவி கீட்ஸ். குயிலின் பாட்டைக் கேட்கும் போதே, அந்த இன்பத்தில் தன் உயிரை விடுவது நலம் என்று சிந்திக்கிறான். மனிதன் சாகப் பிறந்தவன்; பட்சியோ—இசைக் குயிலோ – பாடிப் பாடி அமர நிலை யடைந்து விட்டது. அழியாத இசை வடிவத்தில் சுழல்கிறது அந்தக் கானப்புள்."

இவ்வாறு எண்பது வரிகளில், குயிலின் தன்மை இசையோவிய மாகவே அமைந்து விட்டது. இதுவும் ஓர் அழியாக் கவிதைச் சித்திரம். மொழி ஒரு கோபுரச் சிற்பமாகவே வளருகிறது. இதைப் படிக்கும் போது, பாரதியாரின் "குயில் பாட்டு" உடனே ஞாபகத்திற்கு வருகிறது.

"இன்பம், இன்பம், இன்பம்,
இன்பத்திற்கோ ரெல்லை காணில்
துன்பம், துன்பம், துன்பம்.

'நாதம், நாதம், நாதம்.
நாதத் தேயோர் நலிவுண்டாயின்
சேதம், சேதம், சேதம்!

'தாளம், தாளம், தாளம்,
தாளத் திற்கோர் தடையுண்டாயில்
கூளம், கூளம், கூளம்!

'புகழே, புகழே, புகழே,
புகழுக் கேயோர் புரையுண்டாயின்
இகழே, இகழே, இகழே!

'உறுதி, உறுதி, உறுதி,
உறுதிக் கேயோர் உடைவுண்டாயின்
இறுதி, இறுதி, இறுதி!

'குழலே, குழலே, குழலே,
குழலிற் கீறல் கூடுங்காலை
விழலே, விழலே, விழலே!'

(பாரதியாரின் "குயில் பாட்டு)

அடுத்தது கீட்ஸின் 'பூனைப் பாட்டு' (SONNET TO A CAT) ஒரு கவிதைச் சித்திரம். நித்தியத் தேவையான எலிக் கொலையை எவ்வளவு அருமையாகவும் தந்திரமாகவும் நடத்துகிறது அந்தப்பூனை! அதனுடைய 'வெல்வெட்' காதுகளும், ஒளி தெறிக்கும் கண்ணாடிக் கண்களும், பதுங்கிய கால்களும், தின்பண்டங்களைத் திருடுவதற்கே சிருஷ்டிக்கப் பட்டதாகத் தோன்றுகின்றன. தந்திரமாக ஜந்துக்களை வேட்டையாடப் பிறந்த பூனை, கீட்ஸின் கவிதையிலும் பாய்ந்து விடுகிறது. இதே போல, நமது புதுவைக் கவி திரு. பாரதி தாஸன் பாடியிருக்கும் 'பூனைப் பாட்டு'ம் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது; அதில் பாட்டே ஒரு பூனையாக ஓடிவருகிறது!

கீட்ஸின் 'உறக்கமும் கவிதையும்' (SLEEP AND POETRY) என்ற பாட்டைப் பார்ப்போம்: இது, 404 வரிகளில் அமைந்திருக்கிறது. உறக்கத்தில் மனக் களங்கம் தெளிகிறது. வாழ்வின் உறுதியற்ற நிலையை உணர்ந்த கீட்ஸ், அதன் சபலமான சலன நிலையைக்

கண்டு வியக்கிறான் : 'மனிதா! நின்று சிந்தி; நமது வாழ்க்கை ஒரு நொடியே; ஒரு விருக்ஷத்தின் தலையி லின்று திடீரென்று திணறிச் சிதறி உதிர்கின்ற பனித்துளி போன்றதே நமது வாழ்க்கை; அது கடலின் ஆழ்ந்த அலையில் சுழலுகின்ற தோணியின் நிலையாமை போன்றது; மலராத ரோஜா மொட்டுப் போன்றது; அடிக்கடி மாறிச் சுழல்கின்ற கதை போன்றது; பெண்ணின் முகத் திரை லேசாக எடு பட்ட நிலைபோன்றது; மரக்கிளைகளில், துன்பமும் கவலையுமற்ற மாணவன் துணிந்து சிரித்துக்கொண்டு ஊஞ்சலாடுவது போன்றது" என்று நில்லா வாழ்க் கையை எள்ளி நகையாடுகிறான், கீட்ஸ்.

இதே பாட்டில் கவிதையின் உண்மைச்சிறப்பை வற்புறுத்துகிறான் கீட்ஸ் : "போலிக் கவிதை அறவே ஒழிய வேண்டும், யாப்பிலக்கணத்தில் செதுக்கப் படும் பொய்க் கவிதை அழியவேண்டும்; செய்யுட் தச்சன், கூடலே சேர வேண்டும், அவனுடைய எது கையும் மோனையும் சாம்பலாக வேண்டும். ஆனால் உண்மைக் கவிதை, ஒளி மழையாகவே மின்னிக் கொட்டிக்கொண்டிருக்கும்; அது சன்னதமின்னலில் பிறக்கும் இயல்புடையது. கவிஞனின் வலது கையில் கம்பீரமாய்த் துடிப்பது மின்னற் கவிதை; அதில் கவிதையின் ஒளி, இசைத்துடிப்புடன் இதயத்தில் ஒலித்துக் கொண்டேயிருக்கும். இசையில், ஒலிக்கும் கவிதையில், இடியும் மின்னலும் எழுப்பலாம். அந்த இரகசியம், உண்மைக் கவிஞனின் உள்ளத்திலேதான் ஜனிக்கும். மொழி ஓவியம் இசை ஓவியமாகக் கவிஞனின் இதயத்தில் ஊறி மின்னி வட்டமிட்டு

வரும்! உண்மைக் கவிதை, மனிதக் கவலையை மாற்றும் இயல்புடையது; மனிதன் சிந்தனையை உயர்ந்த நிலைக்கு எழுப்பும் ஆற்றலுடையது. உண்மைக்கவிதை, கால வெள்ளத்தைக் கடந்த ஜோதி வெள்ளமாகும்; அழியாத அமர நிலை கொண்டது; சாகாவரம் பெற்றது."

'**புகழ்**' (Fame) என்பதைப்பற்றி கீட்ஸ் பாடியிருக்கும் வரிகள், மிக அருமையானவை. "திறமையுள்ளவனுக்குச் சுலபமாகப் புகழ் வருவதில்லை; 'புகழ்' எல்லையற்ற, நிறையற்ற ஒரு பெண். ஆதலால் கவிஞர்களே! கலாயோகிகளே! 'புகழ்' என்ற அணங்கை வெறுத்துத் தள்ளுங்கள்! நாம் விரும்பினால், அவள் வாராள். அவளாகப் பித்துப்பிடித்து நம்மைப் பின்பற்றி வரும்போது, தானே வரட்டும்; அவளை நம்பி எதுவும் செய்யாதீர்கள். புகழ்ப் பித்து நமக்கு வேண்டவே வேண்டாம். இது உண்மை; இது சத்தியம்." இந்தப் பாட்டைப் படிக்கும்போது, கீட்ஸை உலகம் போற்றி ஆதரிக்காத மனநிலை, நன்கு தெரிகிறது! 'புகழ்' என்ற பூச்சியைக் கொல்ல வேண்டிய அவசியமும் ஏற்படுகிறது.

மனித வளர்ச்சிப் பருவங்களை ("THE HUMAN SEASONS") அவன் பாடியிருக்கிறான். நான்கு பருவங்களாவன:- (1) இளமை நிறைந்த வசந்தம்; முன் பருவத்தேனை நினைத்துச் சிந்திக்கும்; (2) அதற்கடுத்த கோடைப் பருவம். (3) ஆத்ம சாந்த மடையும் இலையுதிர் காலம். (4) அதன் பின் முதுமை நிறைந்த உருவழிந்த மாரி காலம்; இந்த நான்கு பருவங்களையும் நாம் பாடிக் கொண்டிருக்கும்போது

ஷேக்ஸ்பியர் எழுதிய மனிதனின் 'ஏழு பருவங்கள்' என்னும் பாடல் நம் நினைவிற்கு வருகிறது. நாடகங்களைப் படித்து இன்புற்ற கீட்ஸ், மேலே கண்ட ஏழு பருவங்களையும் உணர்ந்து, அதே கருத்தை நான்கு பருவங்களில் சித்திரித்திருக்கிறான்.

'கருணையற்ற கட்டழகி' ("LA BELLE DAME SANS MERCI") என்ற பாட்டில், இரக்கம் என்பதை அறியாத ஓர் அழகியின் கொடிய உள்ளம் தெரிகிறது. நீண்ட கூந்தல், லேசான பாதம், சிலிர்க்கும் கொடிய விந்தைக் கண்களுடன் அவள் சாய்ந்து கொண்டு இசைக்கிறாள்: அவள் உண்மையில் காதலிப்பதாகத் தோன்றினாள். அவள் குரலிலும் மொழியிலும் ஓர் இன்பம் சுழன்றது; ஆனால் அவள் ஒரு கொடிய பெண் தேவதை; அவளிடம் மையல் கொண்டு அடிமைப்பட்ட அரசரும், திண்டாடுவது உண்மை! இந்தப் பாட்டில், காதலும் அழகும் பெண்மையின் உடலையும் உள்ளத்தையும் திப்படமாகவே சுற்றிக்கொண்டு துடிப்பதைப் பார்க்கலாம். 48 வரிகளில் இந்தச் சித்திரம், உதயமாகிறது.

"காதல் நிலையற்றது: பெண்ணின் உள்ளம் சஞ்சலமும், சபலமுமாகிய அலைகளால் மோதுறுவது; உண்மைக் காதல் நிகழ்ந்து நிலைபெற்றிருப்பது, எதிர்பாராத ஆச்சரியம்" என்று உறுதி கூறுகிறான் கீட்ஸ்; பொம்மைக் காதலும் பொம்மைக் கலியாணமும் எவ்விதப் பயனையும் தராது என்றும் உணர்கிறான். பொய்க் காதலிலும், பொம்மைப் பெண்மையிலும், இளைஞன் உறங்கிக் கொட்டாவி விடுவது நன்மைக் கல்ல; பொய்க் காதலில், வெறுமையும் காய்ந்த

இடம்பழும்தான் மிஞ்சும். இக் கருத்துக்கள் 'நவீனக் காதல்' என்ற பாட்டில் தெளிவாக அமைந்திருக்கின்றன.

'துக்கம்' (MELANCHOLY) என்ற பாட்டில், இன்பத்தின் எல்லையும் துன்பத்தின் எல்லையும் சந்திக்கும் நிகழ்ச்சி தெரிகிறது; வாழ்க்கைத் தறியில், இன்ப துன்ப இழைகள் கலந்தே உயிர் - நெசவு நிகழ்கிறது. இன்பக் கோயிலில், திரையிட்ட துன்ப விக்கிரகமும் தெரிகிறது.

மற்றொரு பாடலில் பெண்மையின் சௌந்தரியமும், காதல் வெள்ளமும் பொங்கி வழிந்தோடும் படி கீட்ஸ் பாடி யிருக்கிறான். ஒரு காதலனும் காதலியும் வருகின்றனர். அவர்கள் இருவருக்கும் மத்தியில் நிகழும் காதல் சித்திரம் கம்பீரமாக, இனிய தந்தத்தில் செதுக்கிக் காட்டப் பட்டிருக்கிறது. இரண்டு மலர்கள் மணம் கலப்பது போல, அவன், அவள் காதற் கனவில் உருகி நிற்கின்றான். இந்த நீண்ட பாட்டில் உள்ள ஒவ்வொரு சிறு இன்ப நிகழ்ச்சியையும், ஒரு நயமான ஓவியமாகவே தீட்டி விடலாம். படிக்கப் படிக்கத் தித்திக்கும் இந்தப் பாடல், ஒப்பற்ற ஒரு கவிதைக் கனியாகும். அவன், காதலின் திராக்ஷாரஸத்தை சௌந்தர்யப் பொற் கிண்ணத்தில் பெய்து, தெவிட்டா தின்பம் நுகர்கிறான். கீட்ஸின் காவிய நடையும், கதியும், பண்பும், வருங்காலத் தமிழ்க் கவிகளுக்கு வளந்தருக!

---

# 4. ஷெல்லி

## க. வரலாறு

ஆங்கிலக் கவிதா மேதைகளில், ஷெல்லி ஓர் உயர்ந்த மன நிலையுடன் பிறந்தவன். அவன் கவிதையில் உணர்ச்சி, ஒப்பற்ற புரட்சியாகவே சுழல்கிறது. சமத்துவம், சகோதரத்வம், சுதந்திரம், இம் மூன்றும் அவன் வாழ்க்கையிலும் கவிதையிலும் பரிமளிக்கின்றன:

"ஆண்கள், சுதந்திரத்துடன் வாழவேண்டும்; பெண்கள் உரிமையுடன் பந்தமின்றிக் காதலிக்க வேண்டும்; கொடுங் கோலர்கள் அறவே ஒழிய வேண்டும்; மதப்பிளவுகள், ஜாதிச் சுவர்கள் நினைத்த நிமிஷமே சாய்ந்து மடியவேண்டும்; கடவுளின் பேரால் மனித சமுதாயம் போரிடக்கூடாது" என்ற உயரிய நோக்கங்களையும் அகண்ட லட்சியங்களையும் கொண்டே, அவன் உள்ளத்தில் கவிதை மின்னிச் சிறகடித்தது.

1792-ல் இங்கிலாந்தில் சஸ்ஸெக்ஸில் ஹார்ஷாமிற்கு அருகில் கவி ஷெல்லி, பிறந்தான்; அவன் பாட்டனார் ஒரு பிரபு. கவியின் தந்தை டிமொதி ஷெல்லி, தம் மகனின் மன நிலைக்கு நேர் விரோதமாகவே நடந்து கொண்டார். ஷெல்லியின் விநோத மனநிலையால், தந்தையின் மனஸ்தாபமே வளர்ந்தது.

ஷெல்லியின் தோற்றம், பெண்மை நிறைந்தது. அவன் பள்ளிக்கூடம் போகும் போது ஒரு பெண், ஆண் வேஷம் போட்டுக்கொண்டு வந்தது போலவே தோன்றும். அவன் சிறு வயதில் நாணிக் கோணிக் கொண்டே நடப்பான். தலைமயிர், தங்க அலைச்சுருள்களாக நெற்றியில் அலைந்து புரளும். கண்கள் திட்சண்ய ஒளி நிறைந்தவை; அவற்றில் கவிதை பிரதிக்கும்!

பள்ளிப் படிப்பை அவன் விரும்பவில்லை; உபாத்தியாயர்களின் கொடுமைகளை அவன் அடியோடு வெறுத்தான். பள்ளியில், உபாத்தியாயர்கள் பெரும்பாலும் உளறுவாயப் புலிகள் என்பதை அவன் நன்கு உணர்ந்தவன். "நூதனமான உண்மைகளை அறிவதற்குப் பள்ளிக்கூடம் நல்ல இடமில்லை; புஸ்தகங்களே, நூல் நிலயங்களே, அறிவின் களஞ்சியம்" என்பதைக் கார்லைல் கண்டது போல, அநுபவித்து உணர்ந்தவன் ஷெல்லி. பள்ளி மாணவர்களுடன் கூடி வாழவும் மனம் வரவில்லை; அவர்களுடைய மிருகச் செயல்களையும் அவன் அடியோடு வெறுத்தான். சிந்தனை நிறைந்த மனத்துடன், தனிமையிலேயே அவன் இனிமை கண்டான். அவனுடைய நீலமணிக் கண்களால், கவிதையின் ஜோதியில் ஆழ்ந்த உண்மைகளைத் தெளிவாகத் தெரிந்து கொண்டான்.

13-வது வயதிலேயே, ஷெல்லி லத்தீன் பாஷையில் நயமான கவிதை புனைந்தான்; அதைக்கண்டு உபாத்தியாயர்கள் ஆச்சரியப்பட்டார்கள். ஆனால், அவன் அவர்களுடைய கொடிய அதிகாரத்தை வெறுத்தான்; 18-வது வயதில் ஆக்ஸ்போர்டு சர்வ

கலாசாலைக் கல்லூரியில், ஆறு மாதங்களே கல்வி பயின்றான். 'கடவுளை நம்பவில்லை' என்ற கட்டுரை ஒன்றைத் தகுந்த காரணங்களுடன் விரிவாக எழுதி வெளியே அனுப்பினான். இதை அறிந்த கல்லூரி அதிகாரிகள், ஷெல்லியையும், அவனுக்காகப் பரிந்து பேசிய நண்பன் ஹாக் என்பவனையும் பள்ளிக் கூடத்தை விட்டு வெளியேற்றிவிட்டார்கள். ஷெல்லி வருத்தப்பட்டான். அவன் தந்தை அவனை வெறுத்துக் கடிந்து பேசினார்; இதை உத்தேசித்து, ஷெல்லியின் செலவுக்குப் பணம் அனுப்புவதைக் கூடச் சிறிது காலம் நிறுத்திவிட்டார். பின்னால், பாட்டனார் செல்வத்திற்கு வாரிசாயிருந்த முறையில், ஷெல்லி வருஷம் ஒன்றுக்கு 1000-ம் பவுன் மான்யம்பெற்று வந்தான்.

ஷெல்லியின் காதற் கதை, ஒரு விசித்திரம்; காதலின் இயற்கை வனப்பை உணர்ந்தவன் ஷெல்லி; காதலர்கள் காதலித்தே மணக்க வேண்டும் என்ற உறுதியை அநுபவத்தில் காட்டினான். முதலில் அவன் **ஹாரியட் வெஸ்ட்புரூக்** என்பவளைக் காதலித்தான்; அதன் பின் காதலித்த பெண், அவளுடைய தங்கை **எலிஜா**; பின்னர் காட்வின் மகள், **மேரி காட்வின்.** முதல் மனைவி ஒரு தேநீர்க் கடைக்காரனின் மகள் என்பதை அறிந்த ஷெல்லியின் தந்தை, மகன் குடும்ப அந்தஸ்திற்குக் கீழான குடும்பத்தில் கலியாணம் செய்துகொண்டதைப்பற்றி மிக மிக வருந்தி, அவனை அடியோடு வெறுத்தார். ஆனால், ஷெல்லி இதைப் பற்றிச் சிறிதும் வருந்தவில்லை: 'காதல், இயற்கையில் சுரக்கும் ஊற்று; அதை ஜாதி, மதப்பிளவுகளில் கட்டுப்படுத்த முடியாது' என்பதை நன்கு உணர்ந்

தவனுகையால், எந்த நங்கையைக் கண்டாலும், அவளுடைய அழகைக் காதலித்து, அவள் உணர்ச்சியையும் அறிவையும பருகினுன்; பலாத்கார மணங்களை அவன் வெறுத்தான். பெண்களின் சௌந்தரியத்தில், ஒரு தெய்வ ஒளி வீசுவதை அவன் கவிதா சன்னதத்துடன் அனுபவித்தான்.

1818-ல் ஷெல்லி, மனைவி மேரி, மகன் வில்லியம், மகள் கிளாரா, எல்லோருமாக இங்கிலாந்தை விட்டு இதாலிக்குப் புறப்பட்டார்கள். அதன்பின் ஷெல்லி இங்கிலாந்திற்குத் திரும்பி வரவில்லை. வட இதாலி முழுதும் குடும்பத்தினர் பிரயாணம் செய்தார்கள். ஆங்கிலக் கவி பைரனுடன் ஷெல்லி உயர்ந்த நட்புக் கொண்டிருந்தான். பைரனை அடிக்கடி கவிதை எழுதும்படி ஷெல்லி யோசனைகள் சொல்லித் தூண்டுவான். பைரன் நடையில், சுழல்கின்ற விறுவிறுப்பைக்கண்டு ஷெல்லி அதிசயிப்பான்; தன் கவிதை அதை விட மட்டமோ என்று ஐயுறுவான்; இதாலிய நீல வானின் அற்புதத்தைக் கண்டு அகமகிழ்வான்; ஏரிகளில் சிந்திக் கிடக்கும் வானச் சுடர்களைக் கவிதை வலை வீசிப்பிடிப்பான்; இயற்கை வனப்பின் சிகரத்தை இதாலியில் கண்டு இடைவிடாது நுகர்ந்தான்.

**'டான் ஜீவான்'** படகில், 1822 ஜூன் மாதம் ஷெல்லியும், அவன் மகன் வில்லியம்ஸும் போகும் போது, பெரும் புயலொன்று தோன்றியது; இடியும் மின்னலும் பயங்கரமா யிருந்தன. புயல் படகைக் கவிழ்த்து விட்டது. ஷெல்லியின் எலும்புகளும் இதயமும் பல நாட்கள் சென்ற பின் கரையில் அகப்

பட்டன. இதாலிய தேச வழக்கப்படி, எலும்புகள் எரிக்கப்பட்டு, சாம்பல் கீட்ஸின் கல்லறை அருகே புதைக்கப் பட்டது. கீட்ஸ் இள வயதில் காலஞ் சென்ற ஓர் ஆங்கிலக் கவி. இதயம் எரியவில்லை; அது மட்டும் இங்கிலாந்திற்கு அனுப்பப் பட்டது. ஷேக்ஸ்பியர் எழுதிய 'புயல்' (The Tempest) என்ற நாடகத்திலிருந்து ஏரியல் (Ariel) பாடிய மூன்று வரிகளை எடுத்து டிரிலான் என்ற நண்பன் ஷெல்லியின் புதை குழியின் மேல் பொறித்து வைத்தான். முப்பது வயதில் உயிர் நீத்த கவிஞன் ஷெல்லியின் பெருமையை, நாம் என்றும் மறக்க முடியாது. இந்த இளமையிலேயே 40,000 வரிகளுக்கு மேல் அவன் கவிதை பாடி வைத்து விட்டே மறைந்தான்.

ஷெல்லி பெருந்தன்மை யுடையவன்; ஈகையில் சிறந்தவன். அவனுடைய நண்பன் லி ஹண்டுக்கு 4000-ம் பவுன்கள் கொடுத்தான். தன் மாமனார் காட்வினுக்கு 6000-ம் பவுன்கள் கொடுத்து அவரை ஹிம்சையிலிருந்து தப்புவித்தான்.

வறுமையே அறியாத ஷெல்லியின் உள்ளத்தில், இயற்கை வனப்பு, கவிதைப் புயலை எழுப்பியது. அவன் பாடிக்கொண்டே வாழ்ந்தான். அவன் கவிதையில் புலமையின் ஆழமும் விஸ்தீரணமும் நன்கு காணலாம்; கலை வாணியின் அருள் மின்ன லும் அதனூடே தவழ்ந்து செல்லுகிறது.

ஷெல்லியின் அறையில் யாரும் சுலபமாகப் போய்வர முடியாது. கவிதையும் விஷமும் ஓரிடத்தில் கிடக்கும். எந்தப் பகுதியிலும், ரஸாயனச் சாமான்

களும், மருந்துகளும் சிந்திக் கிடக்கும். ஷெல்லி ஒரு பூனை போல இரத்தினக் கம்பளத்தில் படுத்துக் கொண்டு, காலையில் கூதல் காய்ந்து கொண்டிருப்பான். யாரையும் கண்டவுடன் திடீரென்று எழுந்து, பாட ஆரம்பித்து விடுவான்.

காகிதக் கப்பல்கள் அடிக்கடி அவன் கையி லிருந்து புறப்படும். கவிஞனின் உயர்ந்த லட்சியங் களை உலகம் முழுதும் பரப்புதற்கு, இதுவே நல்ல உபாயம் என்று அடிக்கடி அவன் சொல்லிக் கொள்வான்.

சிறு குழந்தைகளைக் கண்டால் நிறைந்த ஆச்சரி யத்துடன் பிரமாதமான கேள்விகளைப் போடுவான்; பதிலை எதிர் பார்க்கவே மாட்டான். ஒரு குழந் தையைப் பார்த்து, "ஆ! நீ எந்த உலகத்திலிருந்து வருகிறாய்?" என்று கேட்டானாம்!

ஷெல்லியின் வாழ்க்கையும் கவிதையும் ஒரு புதிய விந்தை உலகமாகவே இருக்கின்றன. வரண்ட மனோ நிலையுள்ளவர்களின் உலகம் ஒரு சுடலை (நரகம்) என்ற முடிவை அநுபவத்தில் உணர்ந்தவன் நமது ஷெல்லி.

## உ. ஷெல்லியின் கவியின்பம்

ஷெல்லியின் கவிதையில் அதற்கென்று இயல்பான ஓர் இன்பம் உண்டு. அது உண்மைக் கவிதை. வெளி இயற்கையிலோ, உள் இயற்கையிலோ நிகழும் அற்புதங்களில் இதயம் மூழ்கி வெளி வரும்போது, ஆவேச மொழி கொப்புளித்து வருகிறது. இதுவே

சன்னதக் குரல். சொற்கள் கலந்து குமுறி வெடித்துப் பின்னி மின்னிப் பறந்து வருகின்றன. அது ஒரு சன்னதப் புயல்,—சந்தப் புயலுங் கூட. இசைச் சிறகுடன் சொற்கள் ஒலித்து ஒளி வீசி வருகின்றன. அவை உணர்ச்சியில் ஊறி விழித்து, கம்பீரமாகக் கலந்து சிறகடித்து வெளி வருகின்றன. கவிதையின் ரீங்காரம், செஞ்சொற் கவியின்பமாகவும், செவி நுகர் கனியாகவும் உதயமாகிறது. "ஷெல்லியின் கவிதை, ஓர் இசை ஓவியம்" என்று ஸ்வின் பர்ண் என்ற மற்ருேர் இசைக்கவி கூறியிருக்கிருன். நமது தேசியக் கவி பாரதியார், ஷெல்லியின் கவிதா சன்னதத்தை அளவுக்கு மிஞ்சி அநுபவித்திருக்கிருர்; ஷெல்லியைப் போல் சில பாடல்களும் பாடியுமிருக்கிருர்.

ஷெல்லியின் நயமான அழகு செறிந்த கவிதை, இதாலியின் இயற்கையில் பிறந்தது. விண்ணும் மண்ணும் கவிதை மண்டிக் கிடப்பதை, ஷெல்லி இதாலிய வானத்தின் கீழே கண்டான், மகிழ்ந்தான், அநுபவித்தான்! உணர்ச்சியால் உந்தப்பட்ட கவிதை, கற்பனை வானில் ஆர்கலித்து எழுந்தது; டெனிஸனைப் போல், ஷெல்லி இயற்கையை அப்படியே படம் எழுதிவிடவில்லை; இயற்கையின் சலனத்திலும் சஞ்சலத்திலும், தனக்கு வேண்டிய உருவத்தைக் கற்பனையால் வெட்டி யெடுத்து, தன் மனோபாவம் போல, நூதனமான சித்திரங்களைத் தனது அழியாக் கவிதையில் ஆக்கி வைத்தான்; வேர்ட்ஸ்வொர்த்தைப் போல, இயற்கையை ஒரு

தெய்வமாகவும் ஷெல்லி கருதவில்லை: தன் இஷ்டம் போல இயற்கையின் திருவிளையாட்டைப் பயன் படுத்திக் கொண்டான்.

ஷெல்லியின் கவிதை சந்தச் சுழற்சியாகவும், சன்னதப் புரட்சியாகவுமே பரவி வருகிறது. அவனுடைய 'வானம் பாடி' என்னும் பாடலில் ஓர் உண்மைக் கவியின் உள்ளத்தை நாம் நன்கு அறியலாம். சொற்கள் பீறிட்டுப் பாய்கின்றன: வானம் பாடியின் இசை யொலி, கவியின் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்கிறது; உடனே வானம்பாடியே ஒரு கவியாக மாறி விடுகிறது; ஷெல்லியும் தான் ஒரு வானம்பாடியாக மாற ஆவல் கொள்கிறான்! இதுதான் உண்மைக் கவியின் உள்ளத் துடிப்பு; இதுவே பிறவிக் கவியின் இரகசியம். வானம்பாடியின் மாணாக்கனாகவேண்டும் என்று ஷெல்லி துடி துடிக்கிறான்; வானம்பாடியின் இசைச் சிறப்பு தனக்கும் சிறிதளவாவது கிடைத்துவிட்டால், தான் மெய்ம்மறந்து வானம்பாடியின் இசையைக் கேட்பது போல், உலகமே தன் கவிதையைக் கேட்டு வியக்கும் அல்லவா? இதுவே கவியின் ஆர்வம்! எவ்வளவு உயர்ந்த உணர்ச்சிப் படியில், இந்த முடிவற்ற ஆர்வம் துடிக்கிறது! வானம்பாடியின் இசைப் பைத்தியம், தனக்கும் உடனே பிடிக்காதா? இது ஒரு நல்ல கேள்விதான்.

வானம்பாடியின் தன்மையைப் பாருங்கள்: அது ஆனந்தமான பறவை; ஆனால், பறவையன்று: ஆனந்த வடிவில் சுழல்கின்ற இசையுள்ளம். அதனுடைய நிறைந்த உள்ளம், சிந்தனையின்றி, எவ்வித

முயற்சியுமின்றி, இசை வெள்ளத்தையே வாரிக் கொட்டுகிறது. மண்ணிலிருந்து விண்ணை நோக்கிப் பறக்கிறது; மறைய மறையத் தோற்றம் தீப்புகை போலத் தெரிகிறது. நீல விண்ணில் சிறகடித்து, இசையின் கொந்தளிப்பில் ரீங்காரமிடுகிறது. பாடிக் கொண்டே பறப்பதும், பறந்து கொண்டே பாடுவது மாய்க் காட்சியளிக்கும் விந்தைப் பறவையே, இந்த வானம்பாடி! மறையும் சூரியனின் பொற் கிரணங்களில் ஒளி பெற்று மின்னும் மேக மண்டலத்தில் ஆனந்த வடிவில் சுழல்கிறது, இந்தக் கீதப் புள். அந்திவான ஜோதியில், அது நட்சத்திரம் போல மறைந்து விடுகிறது; விடியற்காலையிலும் கரைந்து விடுகிறது. இரவில், சந்திரனின் ஒளி மழையிலும், வானம்பாடியின் கீதம் மண்ணிலும் விண்ணிலும் விடாது ஒலித்துக்கொண்டே யிருக்கிறது; கான வெள்ளம் அதன் மேக மண்டலத்திலிருந்து வழிந்தோடிப் பாய்கிறது. சிந்தனை ஒளியில் மறைந்து கிடக்கும் ஒரு கவிஞனைப் போல, வானம்பாடி காட்சி யளிக்கிறது. தன் இதய நிறைவில் பாடி வரும்போது, உலகமே உணர்ந்து உணர்ந்து செவி சாய்க்கும் நிலையே இது!

தனிமையில் ஒரு காதலி தன் உணர்ச்சியை இசையில் சாந்தப்படுத்திக் கொள்வது போல அந்தக் கானப் பட்சியின் நிலை உள்ளது. வானம்பாடியின் இசைச் சிறப்பின் காரணம், கவலை மறந்த நிலையா, அல்லது துன்பம் அறியா நிலையா? மனிதன் துன்பத்தில் துடித்து இசையின் சிறப்பையே இழந்து விடுகிறான்; மனிதன் பாடும் நயமான பாடல்களில்

சோகத் துடிப்பே ஊடுருவிப் பாய்கிறது. மானிட வாழ்க்கையில் இன்பத்தில் துன்பத் துடிப்பே அதிகம்; கவலையற்ற சிரிப்பே மனித வாழ்க்கையில் இல்லை; மண்ணை வெறுத்து மேலே மறந்து பறக்கும் வானம்பாடியின் கீதச்சிறப்பு ஒரு மானிட கவிஞனுக்கு இருந்தால், உலகம் வியந்து கவிஞன் குரலுக்கு செவி சாய்த்து நிற்கும் அல்லவா ?

இனி ஷெல்லியின் '**மேகம்**' என்ற பாட்டைப் பார்ப்போம்: அதில் இயற்கையின் சித்திரங்களும், விசித்திரங்களும், லீலைகளும் நன்கு புலனுகின்றன. மேகத்தின் விளையாட்டு ஒரு செளந்தரிய ஜாலமாகவே காட்சியளிக்கிறது. ரசாயனக் குறிப்புகள் கவிதைச் சிறப்புடன் அமைந்திருப்பது கவனிக்கத் தக்க அற்புதம். நீர் ஆவியாகி மேக நிலை எய்தி, மீண்டும் மழையாகப் பொழிந்து விண்ணையும் மண்ணையும் இன்பமாய் இணைக்கும் விந்தைப் பொருளாகக் காட்சியளிப்பதும் ஒரு நூதனக் கவிதா சிருஷ்டிதான். இந்த இயற்கையின் விளையாட்டில், இடி, மின்னல், புயல், மலை, மழை, ஆறு, ஏரி, வர்ணக் களஞ்சியமான வானவில், சந்திரன், சூரியன், நடசத்திரம் எல்லாம் கலையின் ஆவேசத்துடன் கலந்து புரளும்போது, கவியின் மேகமண்டலம் ஒரு விந்தை உலகமாகவே மாறிவிடுகிறது. மேகம் ஓர் அழிவற்ற பொருள் என்றும், தோற்றம் மாறுவதைத் தவிரப் பொருள் அழிவதில்லை என்றும் கவிஞன் கூறுவது நமது வாழ்க்கைக்கே பொருந்தும் உண்மையாகி விடுகிறது. சொற்கள், விந்தைச் சொற்கள், மேக லீலைகளை தெளிவாகச் சித்திரிக்கின்றன; ஷெல்லி

கண்ணால் கண்ட மேகமே, இந்தப் படம். ஆங்கில மூலத்தின் கவிதை யொளி குன்றாமல், எனது நண்பர் பண்டிதர் திரு. ரத்நம் அவர்கள், நாம் படித்து இன்புறும் படி தமிழில் பாடியிருப்பதை அடியில் தருகிறேன்:—

## மேகம்

ஓடை, கடல்களில் உள்ள நீர் கொண்டு
வாடும் மலர்கள் மலரத் துளித்தே,
ஆடும் இலைகள் பகற்கன வாறக்
கூடி நிழலைக் கொடுத்திடு கின்றேன். 1

ஆதவ னைச்சுற்றி ஆடிடும் தாயின்
மார்பினில் தூங்கி மகிழும் முகைகள்
பாதி விழிப்பப் பனித்துளி வீச
மோதும் சிறகுகள் முற்றும் விரிப்பேன். 2

கடும்புய லோடுவெண் பனிமழை கக்கி,
நெடும்பசும் நிலத்தைவெண் ணிறமதாய் ஆக்கி,
உடன்பெரு மழையினில் ஒன்றாய்க் கலக்கி,
இடியில் இருந்தே இரைந்து சிரிப்பேன். 3

வாழ்பெரும் பைன்மரம் வாய்விட் டலற,
வீழ்பனி மலைமிசை வீச, அவைகள்
பாழ்புயல் தோளில் படுத்திடும் போது
நீளிர வென்வெள்ளைத் தலையணை யாகும். 4

வானில வீட்டில், வளர்கோ புரத்தில்,
ஆனவென் சாரதி மின்னல் அமரும்:
கூனி இடியறைக் கூட்டில் கிடந்தே
ஈனக் குரலில் இடித்துக் குமுறும். 5

நீலச்செம் புணரியின் ஆழக் திரியும்
வேலொத்த தெய்வம்செய் ஜாலத்தி னாலே

நீளித் தரைமிசை நின்ற கடல்மேல்
சீலத்தென் பாகனும் செவ்விதிற் செல்வான். 6

ஆடும் அருவிகள், அஞ்சிடும் பாறை,
நீடிய குன்றுகள், நீர்நிறை ஏரி,
ஓடும் வெளிகளில் உள்ளவை, மேலும்
கேடில் பெருமலை ஆறுகள் கீழும். 7

கனவுகள் கண்டு களித்திடும் போழ்து
தனதுயர் தெய்வமும் சார்ந்தங்கு தோன்றும்,
அனையவன் மழைகளில் அங்கம் அழியத்
தினகரன் நீலச் சிரிப்பினில் காய்வேன். 8

பூமி வெடித்தசைந் தாடிடும் போது,
மாமலைப் பாறையின் மூக்கினில் வந்து,
காமர்ச் சிறகை விரித்தோர் கழுகு
போய்மற் றிருந்து புறப்படல் போல 9

மங்கிய வெள்ளி மறைந்து படுக்கச்
செங்கதிர்த் தெய்வமும் தீவிழி சிந்தித்
தன்கதிர்த் தோகையைத் தாழ விரித்தே
என்கவின் முதுகிடை ஏறியே தாவும். 10

அன்பொடும் மாலை அலுத்துக் களைத்தே
இன்பம் நுகர்ந்தங் கிருந்து சுகிக்கப்
பொன்பொலி நீர்க்கடல் ஆழம் புகுந்த
தன்பெரும் ஆர்வத்தைத் தந்து விலக்க 11

தொடுவான் புறமும் தொடர்ந்து சிவந்த
உடையினைப் போர்த்தச் சிறகை ஒடுக்கி
அடைகாத் திருக்கும் புறவென வாகி
இடைப்பஞ் சரத்தில் இவர்ந்து படுப்பேன். 12

துள்ளும் மதியெனச் சொல்லி அழைக்கும்
வெள்ளொளி வீசிடும் வட்ட முகத்தாள்,

நள்ளிருட் காற்று நயந்து பரப்பும்
வெள்ளைத் திரைமிசை மெல்ல நடப்பாள். 13

வானுளோர் மட்டிலும் கேட்டு மகிழும்
காணெணுக் காலடி என்மனைக் கூரைக்
கான இழைகள் அறுத்திட வாங்கு
மீனினம் பின்வர நோக்கி விழிக்கும் 14

பொன்னிறத் தேனினக் கூட்டத்தைப் போலப்
பின்னிச் சுழன்றிசை யோடு பறக்க,
அன்னவை கண்டுநான் ஆனந்தங் கொள்வேன்
என்னரும் காற்றும் எழுப்பிய வீட்டில், 15

கூரை குலையவும், ஆறுகள், ஆழி,
ஏரிகள் எங்கணும் என்மனை வீழ்ந்த
வீரிய விண்ணகத் துண்டுகள் போலச்
சேர அமைந்திடும் தண்மதி சேர்ந்தே. 16

சூரியன் சுற்றிலும் அக்கினி வட்டம்,
நேர்மதி சுற்றிலும் நித்தில மாலை,
ஆர அமைத்திடு வேன்சுழற் காற்றென்
வீரக் கொடியை விரித்திடும் போது. 17

ஓயும் எரிமலை தாரகை ஓடும்
ஆய மலைகளும் தூண்களாய்க் கோடி
பாயும் கடல்மிசைப் பாலம் நிகர்த்துத்
தோய்கதிர் பாய்ந்திடாக் கூரையாய்த் தொங்கும். 18

ஆருமென் ஆசனத் தஞ்சிக் கிடக்கும்
வீரிய விண்ணகச் சக்திகள் ஆய
சீரெரி தீப்பனி யோடு சிறந்த
வீர வளைவில் விளங்கிடச் செல்வேன். 19

ஈரம் நிறைந்தவிப் பூமி யிளிக்கச்
சூரியன் நூற்றிடும் தூய நிறங்கள்

சீரோடு லட்ச நிறங்களாய்ச் சேர்ந்து
பாரிய வில்லெனப் பாய்ந்து கிடக்கும். 20

பூமிக்கும் நீர்க்கும் புதல்வியாய்த் தோன்றி
வான்மகள் ஏந்தி வளர்க்க வளர்ந்தேன்:
காமர்க் கடல்தரைக் குள்ளும் நுழைவேன்,
ஆமென மாறுவேன்— ஆயினும் சாகேன்! 21

மாரிக்குப் பின்னொரு மாசும் இலாதே
சீரிய வானத்துப் பந்தர் திகழும்
சேர்கதிர் வாயு செலுத்தவும் நீலப்
பேரொளி மண்டபம் பேணிச் சமைக்கும். 22

வெண்ணிற மேகங்கள் கூடிப் படுத்துக்
கண்ணுறங் குங்குகை கட்குப் புறத்தே
விண்ணுறை என்னுயர் வீட்டில் இருந்தே
கண்ணிய மாகக் களித்துச் சிரிப்பேன். 23

வல்ல கருப்பையில் வாழ்சிசுப் போலக்
கல்லறை வாழும் பிசாசு கடுப்ப,
மெல்ல எழுந்திடு வேனவை மீண்டும்
அல்லல் அறவே அழித்திடு வேனே! 24

ஷெல்லியின் காதல் உலகம், ஓர் அற்புத உலகந் தான். கவிதை வெறிபோல், காதல் வெறியும் இயற்கையில் வெடித்துக் குமுறி வளர்வது வழக்கம்தான். இதை யாராலும் மறுக்கமுடியாது. சதி-பதிகளின் சம்மதமற்ற கொடிய செயற்கை மணங்களில் காதல் நிகழ்வதில்லை. இதை உணர்ந்தே ஷெல்லி காதலில் இறங்குவான்; பெண்களுடைய அழகின் ஜ்வாலையைக் கண்டு மயங்கி லயித்துவிடுவான். அறிவு கலந்த அழகிகளா யிருந்தால், அத்தகைய பெண்களுடன் கலந்து வாழ்வதுதான் உண்மையான சுவர்க்கம்

என்பது அவனுடைய அநுபவ அபிப்பிராயம். இதை மறுப்பவர்களோ, தடுப்பவர்களோ அறிவிலிகள் என்றும், வெளி உலகம் உணர்ச்சியற்ற வெறும் சுடலை என்றும், மனிதர்கள் பெற்றோர்கள் என்ற முறையில் கலியாண நிபந்தனைகள் ஏற்படுத்துவது ஒரு கொடிய விலங்கம் என்றும் உணர்ந்தவன் ஷெல்லி. ஒரு பாட்டில், *காதலின் உயர்ந்த லட்சியங்களையும், அழகின் காம்பீரியத்தையும், பெண்மையின் கீதக்குரலையும், அறிவொளி ததும்பும் சௌந்தரியச் சிற்பமான பெண் சிருஷ்டியின் சிறப்பையும், உண்மைக்காதலில் ஒருமைபெற்ற காதலர்களின் இதயங்கள் அழிவற்ற ஜோதியின் மின்னற்கிரணங்கள் என்பதையும் ஷெல்லி உணர்ச்சியோடு பாடி வைத்திருக்கிறான். காதலில் கவிதை ஊறி வளர்ந்து பொலிவுற்று வருவது இயல்பு என்று ஷெல்லியும் கவி பாரதியாரும் அனுபவத்தில் உணர்ந்தவர்கள். அதனாலேயே பாரதியாரும்,

> **"காதல், காதல், காதல்,**
> **காதல் போயின், காதல் போயின்,**
> **சாதல், சாதல், சாதல்"**

என்று இன்பமாகப் பாடியிருக்கிறார். இயற்கையில் எந்தப் பொருளும் தனிமையில் கிடந்து தத்தளிக்க வில்லை; சிருஷ்டியின் இரகசியம், காதல் கலப்பே. இதை ஷெல்லி பல பாடல்களில் வற்புறுத்தியிருக்கிறான். அவனது '**காதலின் தத்துவம்**' என்ற பாட்டில், இயற்கையின் காதல் மர்மங்கள் விளையாடுகின்றன. அருவிகள் ஆற்றில் கலக்கின்றன; ஆறுகள் கடலில்

---

* Epipsychidion

கலக்கின்றன; வானக் காற்றுகள், இன்ப உணர்ச்சியுடன் கலக்கின்றன; உலகத்தில் எதுவும் தனிமையில் தவிக்கவில்லை. மலைகள் விண்ணை முத்தமிடுகின்றன; அலைகள் ஒன்றையொன்று தழுவுகின்றன; சூரியன் பூமியை அணைகிறான்; சந்திரக் கிரணங்கள் கடலோடு கொஞ்சுகின்றன; அதே போல், காதலர்கள் கொஞ்சுவதும் அவசியமல்லவா? இது ஒரு நல்ல காதல் கேள்விதான்!

'**சிதறும் ஒளி**' என்ற பாட்டிலும், காதலும் அதன் இன்பமும், சிதறிய காதலும் அதன் துன்பமும், ஓர் ஓவிய மாகவே சித்திரிக்கப்படுகின்றன. காதலின் நிலையாமையும், மாறும் இயல்பும், இதில் பல அணிகளில் உதிக்கின்றன. உவமை, சிறந்த முறையில் அமைந்திருக்கிறது. ஷெல்லியின் வாழ்க்கையின் எதிரொலி இதில் கேட்கிறது.

"***செஞ்சி**" என்ற நாடகம், நல்ல கட்டுக் கோப்புடன் அமைந்திருக்கிறது. ஷேக்ஸ்பியர் நாடகத்திற்குப்பின், ஷெல்லி எழுதிய இந்த நாடகம் உறுதியாகவும், கலை ஆவேசத்துடனும் தோன்றியிருக்கிறது. தந்தை தன் மகளையே காதலிக்க எத்தனிக்கும் போது மனஉறுதியுள்ள மகள் தந்தையை வெறுத்துத் தள்ளிவிட்டு, ஓலிம்பியோ மார்சியோவுடனும், தனது மாற்றாந்தாயுடனும் கலந்து சூழ்ச்சி செய்து, தந்தையை விஷமிட்டுக் கொல்லுகிறாள்; இதைப் "போப்" அறிந்து அவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கிறார். சமூக ஊழல்களையும், குடும்ப வாழ்க்கையில் உள்ள ஊழல்களையும், மதசம்பந்தமாயும்

* **செஞ்சி நாடகம்**, எம்மால் தனி நூலாக வெளியிடப்பெற்றுள்ளது.

அரசியல் சம்மந்தமாயும் உள்ள ஊழல்களையும் விலக்குவதற்கே ஷெல்லி இந்த நாடகத்தை உணர்ச்சிப் பிழம்பாகச் சிருஷ்டித்திருக்கிறன். பெண்ணின் வீரம் நிறைந்த இந்த நாடகம் முதன் முதலில் தமிழில் வெளிவந்திருப்பது போற்றத்தக்கது.

**'விடுதலையடைந்த பிராமீதியஸ்'** என்ற நாடகத்தில், உலகச் சீர்திருத்தமும், சுதந்திர தாகமும், லட்சிய உறுதியும், அதை மீண்டும் நிலைநிறுத்தும் வீரனின் மனவன்மையும் நன்கு விளங்குகின்றன. 'உயிர் போனாலும், சுதந்திர லட்சியத்தை இழக்க முடியாது' என்று அடிமை வாழ்வை வெறுத்த உயர்ந்த உண்மை, இந்த நாடகத்தில் நன்கு சித்திரிக்கப் பட்டிருக்கிறது. தமிழில் நல்ல முயற்சியுடன் மொழி பெயர்த்தால், இது ஓர் அரிய இலக்கியத் தொண்டாகும்.

ஷெல்லியின் **'மேல் காற்று'**, காற்றுப்போலவே மொழி யலைகளில் சுழல்கிறது. இந்தக் காற்றின் அதிர்ச்சியில் உலகமே சுழல்கிறது; கற்பனை சுழல்கிறது; உணர்ச்சி அலைகள் இலைகளோடு அலைகின்றன. மழையும் மின்னலும் காற்றின் அலைகளில் சுழல்கின்றன. புயல் ஒரு கவியாகவும், தீர்க்கதரிசியாகவும், வருங்கால உலக விளக்கமாகவுமே திடீரென்று குதித்துக் குமுறிக் கொண்டு வருகிறது. அதன் அதிர்ச்சியிலும் அசைவிலும், ஓர் உண்மைக் கவிஞனின் மந்திரச் சொல் ஒலிக்கிறது. கவிஞனின் இதய ஒலியானது காற்றில் அலைந்து அலைந்து உலக மாந்தர்களின் உள்ளத்தையே முற்றுகையிட்டு, வருங்

கால உண்மைகளையும் அவர்கள் இதயங்களில் தெளிக்குமா? வருங்கால உலகத்தின் நாத பேரிகையாகவே இந்தக் காற்று, கவிஞனின் உண்மைகளை உலகில் பரப்பித் தொண்டாற்றுமா? இதுதான் ஷெல்லியின் ஆர்வம் நிறைந்த கேள்வி — ஓர் உத்தமக் கவிஞனின் கேள்வியும் கூடத்தான்! இந்தப் பாட்டில் புயல்-சித்திரம் உறுதியாக, மங்காமல், சிதறாமல் அமைந்திருக்கிறது; கவிதைக்கலை, கலையுடன் பொலிகிறது.

இளமையில் இறந்துபோன **கீட்ஸ்** எப்படி இறந்தான், எவ்வாறு பத்திரிகையில் அவன் கவிதையின் குறைகளைப்பற்றி மதிப்புரை எழுதிய அறிவிலிகள் கவிஞனைக் கொன்றுவிட்டார்கள் என்பதைப்பற்றி ஷெல்லி '**அடோனிஸ்**' என்ற பாட்டைப் பாடி வைத்திருக்கிறான்: 495 வரிகளில், உயர்ந்த உண்மைகள் அதில் கவிதைச் சித்திரங்களாகக் காட்சியளிக்கின்றன. இதையும் தமிழில் மொழிபெயர்க்கவேண்டியது அவசியம்; ஒரு கவிஞன் அருளுடன் பிறக்கிறான். அவனுக்கு இளமை, முதுமை, மரணம் என்ற வாழ்க்கைச் சிறை கிடையாது; அவன் அமரன்; அவனுடைய அமர ஜோதி, விண்ணில் கவிதையொளி வீசிக்கொண்டு, உலகத்திற்கு ஒரு வழிகாட்டியாகவே நின்று நிலவும் நட்சத்திரமாகும். அவன் புகழும் கவிதையும் மரண எல்லை தாண்டிய நித்திய ஜோதி மண்டலத்தில் மின்னிக்கொண்டேயிருக்கும்.

நமது வாழ்க்கை ஒரு வர்ணக்கண்ணாடிக்கூண்டு; "முடிவற்ற ஜோதியின் வெண் ஒளியைக் களங்கப் படுத்தி விடுகிறது, இந்த, இந்திர ஜாலக்கண்ணாடி"

என்று பாடியுள்ள வரிகள் இடையருு இன்பம் அளிப்பவை :

> " Life, like a dome of many-coloured glass
> Stains the white radiance of Eternity."
>
> (ADONAIS)

'ஹெல்லாஸ்' என்பது ஷெல்லி எழுதிய ஓர் இசை நாடகம்: அதில் துருக்கியர்களுக்கும் கிரேக்கர்களுக்கும் நடந்த யுத்தத்தையே ஷெல்லி தனது இன்பமான விறு விறுப்பான நடையில் வருணித்திருக்கிறுன் நாடகக் கலைச்சிறப்புடன், சம்பாஷணை தங்குதடையின்றி ஓடுகிறது. முடிவில் ஒரு பாட்டில், கிரீஸின் புது யுகத்தை வாழ்த்தி வரவேற்கிறுன், உணர்ச்சிக் கவியான ஷெல்லி. " புது யுகம் தங்க வளையமாகவே சுழன்று வருகிறது; தீய செயல்கள் மாறி, நல்ல யுகம் நன்மையை நாடியே பிறந்திருக்கிறது; இனிக் கொடுமை யில்லை " என்று முடிக்கிறுன்.

உண்மைக் கவிதை எது என்பதைக் குறித்து, ஷெல்லி ஐம்பது பக்கங்களுக்கு மேலுள்ள ஒரு அருமையான கட்டுரையில் ஆராய்ந்திருக்கிறுன். தன்னுடைய நண்பர் 'பீகாக்' (PEACOCK) எழுதிய தர்க்கத்திற்கு மறுப்பாகவே ஷெல்லி இந்தக் கட்டுரையை எழுதினுன். கவிதையின் முக்கிய லட்சணங்களையும், ஒரு கவி எப்படி காலக்குழந்தையாகப் பிறந்து தனது காலத்தையே மீண்டும் மறுமலர்ச்சியுடன் சிருஷ்டிக்க முயல்கிறுன் என்பதையும், மூல ஒளியுடனும் இதயப் பண்புடனும் விளக்கியிருக்கிறுன். 'உண்மைக்கவி கண்டபடி செய்யுளைக்

கட்டுபவனல்லன்; அருளுடன் பிறந்து மன எழுச்சியுடன் பாடுபவனே உயர்ந்த கவிஞன்' என்பதை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்கியிருக்கிறான். ஒரு கவிஞனின் உள்ளத்தில் கவிதை மின்னும் நிமிஷங்கள், அருளும் அழிவற்ற காம்பீரியமும் பொருந்தியவை; அவை மரணத்தைக் கொன்று வெற்றி பெறும் அமரத்துவத்தின் அணுக்களேயாகும்; கலைவாணியின் அருளாலேதான் மில்டன் போன்ற மகாகவி பாட்டுப் பாடியிருக்கிறான்: அவன் ஓர் அமரகவி; இத்தகைய கவிஞர்கள், பிறர் ஆக்ஞைக்குப் பாடுபவர்கள் அல்லர். அவர்கள் அருளால் பாடுகிறவர்கள். அவர்கள் வாக்கு, உண்மையுடன் விளங்கும். போலிக் கவிஞன்தான், உணர்ச்சியின்றி, அருளின்றி, உயிர்க்கற்பனையின்றி, எதையாவது, எப்படியாவது, செயற்கைச் செய்யுளாகக் கட்டிக் காட்டுவான். போலிக் கவிஞனின் போலிக் கவிதை உயிரற்றுச் சாம்பிக் கிடப்பது உண்மையே!

ஷெல்லியின் தனிச்சிறப்புள்ள கவிதை, அவன் எழுதிய வசனத்திலும் அருமையாக ஒளிர்கிறது. பன்மொழி ஆராய்ச்சியாளரான ஆசிரியர் **ஸெயிண்ட்ஸ்பரி** (PROF. SAINTSBURY) இதை நன்கு எடுத்துக் காட்டுகிறார். ஷெல்லி, தன் கவிதைகளுக்கு எழுதியிருக்கும் வசன முன்னுரைகளிலும், அவன் கடிதங்களிலும், கட்டுரைகளிலும், கவிதை மிக ஆழமாக மின்னிப் பொலிவதைக் காணலாம்.

ஷெல்லிக்குப் பிறகு, வேறொரு ஷெல்லி இன்னும் பிறக்கவில்லை. ஷெல்லியின் கவிதைத் தேனைப் பருகியோர், பைரன், பிரௌனிங், பிரான்ஸிஸ் தாம்ஸன்,

விட்மன், தாகூர், ஹரீந்திரர், பாரதியார் முதலியோர். பாரதியாரின் கவிதையிலும், ஞானரதம் போன்ற அவரது வசனநூல்களிலும், ஷெல்லியின் இதயத் துடிப்பையும், கற்பனை மின் சாரத்தையும் நாம் கண்டுமகிழலாம்! ஷெல்லி ஆங்கிலத்தில் கவிதை எழுதியதைத் தவிர, லத்தீன் பாஷையிலும் கவிதை எழுதியிருக்கிறான் : ஸ்பானிஷ், இதாலிய பாஷைகளிலிருந்தும் அருமையான விஷயங்களைத் தேர்ந்து ஆங்கிலக் கவிதையாக்கித் தந்திருக்கிறான். மொழிபெயர்ப்பில், மூலச்சுடர் மங்காமல், சித்திரமும் கருத்தும் வழங்கப்பட்டிருப்பது கவிஞனின் அபூர்வச் சிருஷ்டிச் சிறப்பையே காட்டுகிறது. முப்பது வயதிலே ஷெல்லி மண்ணுலகை விட்டு மறைந்தது, இங்கிலாந்திற்கே ஒரு பெரிய நஷ்டமாகும். கவியரங்கில் பல ஷெல்லிகள் தோன்றிப் புகழோங்குக !

முற்றிற்று.

# புதிய நூல்கள்

(அச்சில்)

1. விதியும், தன்னம்பிக்கையும் :

[எமர்ஸன் கட்டுரைகள்—மொழிபெயர்ப்பு :
வி. ஆர். எம். செட்டியார், சு. நடராஜன்.]

2. பூச்சூட்டல் :

[இலக்கியக் கட்டுரைகள்—
வித்வான் வி. சு. திருநாவுக்கரசு.]

ஸ்டார் பிரசுரம்,
பாலக்கரை,
திருச்சிறுப்பள்ளி.

மதராஸ் ரிப்பன் பிரஸ், ராமச்சந்திரபுரம்.